THE "VAKIL"—TAMIL LAW MONTHLY FOR THE PUBLIC

646

"வக்கீல்"

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
28 NOV
MADRAS

646
4.57.

பொது மக்களுக்குத் தேவையான
புதிய சட்டங்களையும் கண்ட்ரோல் முதலிய
விதிகளையும் உடனுக்குடன்
விமர்சனங்களுடன்
விளக்கும்

தமிழ் சட்டப் பத்திரிகை

(மாத வெளியீடு)

இந்த இதழில்

கிராமப் பஞ்சாயத்து சட்டத்தின் மேல் சர்க்கார் அறிக்கைகள்

மைனர் கார்டியன் செய்யும் கிரய சாசனங்கள்

இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்ட வழக்கு

விற்பனை வரி புதிய விதிகள்

ஷாப் சட்ட விதி விலக்கு

பாக பத்திரம்

கேள்வி — பதில்

விபரம் உள்ளே பார்க்கவும்

THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS
TIRUVADAMARUDUR P.O.
Date..............
TIRUBUVANAM.

நாகரீக நூதன பார்டர்களில்
கண்ணைக் கவரும்
மனோகரமான வேலைப்பாடுள்ள

பட்டு ஜவுளி தினுசுகள்

குறைந்த விலையில் கியாரண்டியுடன்
கிடைக்குமிடம்

ராணி ரெங்கய்யர் சன்ஸ்

கைத்தறி பட்டு ஜவுளி உற்பத்தியாளர்கள்
கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சு:—
20, லக்ஷ்மிபுரம் 2-வது தெரு,
மதுரை

பெங்களூர்
காஞ்சீபுரம்
கும்பகோணம்

பட்டுச் சேலைகள்
நூதன பார்டரில்
ஏராளமாக ஸ்டாக் செய்திருக்கிறோம்

ரெங்கமூர்த்தி கம்பெனி

கெருடலாயத் தெரு,
கும்பகோணம்.

பிராஞ்சுகள்:—
காரைக்குடி & நாட்டரசன்கோட்டை.

ஜாதகம்! ★ ஆருடம்!!

இன்றே எழுதுங்கள். பிறந்த ஜில்லா, தேதி, நேரம் அல்லது ஜாதக நகல் தேவை.
ஜாதகம் இல்லாதவர் கடிதம் எழுதும் நேரம் குறிக்கவும்.

கட்டண விபரம்: 1 முதல் 3 உமது எதிர்கால கேள்விகட்கு ரூ. 2. 3-க்கு மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஒரு வருட பலன் 8 பிரிவுகளில் எழுத ரூ. 5. ஆயுள் பூராவுக்கும் பலன் சுருக்கமாக எழுத ரூ. 35. ஜாதகம் கணிக்க ரூ. 3. ஒரு தசாவிற்கு புக்திவாரியாக பலன் எழுத ரூ. 12.

குறிப்பு: வெளிநாட்டுக்கு இரட்டிப்பு கட்டணம்.

Lt. Col. M. N. C சர்ஜன் ஜெனரல் மதராஸ் கூறுவதைக் கவனியுங்கள்:—

தாங்கள் அனுப்பிய ஜாதக பலன் வியக்கத்தக்கது. எனக்குத் திடீரென்று ரூ 35,000 கிடைக்கும் என்று தாங்கள் குறிப்படியே எதிர்பாராமல் எனக்கு ரூ. 35,000 கிடைத்தது.

மானேஜர்: வீனஸ் அஸ்டிரோலாஜிகல் ப்யூரோ
தெப்பக்குளம் P.O., திருச்சி

"வக்கீல்"

பொதுமக்களுக்கான உயர்தர மாத
சட்ட வெளியீடு

ஆசிரியர் கமிட்டி

ஸ்ரீ T. சம்பத், B. A., B. L.,
,, G. நாகராஜ பத்தர். B. A., B. L.,
,, V. தியாகராஜன், B. A., B. L.,
,, A. பார்த்தசாரதி நாயுடு, B. A., B. L.,
,, S. சாம்பசிவய்யர், B. A., B. L.
,, T. S. வெங்கடராமன், B. A., B. L.,
,, R. கோபாலசாமி. B. A., B. L.,
,, R. கிருஷ்ணமூர்த்தி, B. A., B. L.,
,, P. சுந்தரேசய்யர் B. A., B. L.,
,, V. S. விஜயராகவாச்சாரி. B. A., B. L., (ஆசிரியர்)

"வக்கீல்" சந்தா விபரம்

வருட சந்தா அதாவது 12 இதழ்களுக்கு மட்டில் } ரூ. 3—0—0

விசேஷ வருட சந்தா ரூ. 6—0—0
[12 இதழ்களுக்கும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்களுக்குமாக]

ஷெ வெளிநாடு ... ... ரூ. 10—0—0

சந்தாதாரர்கள் கவனிக்கவும்

1. வருட சந்தாதாரர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 இதழ்கள் மட்டில் அனுப்பப்படும். விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேருபவர்களுக்கு சந்தா அனுப்பும் மாதத்திலிருந்து 12 "வக்கீல்" மாத இதழ்களும் அவைகளுக்கிடையே வெளியிடப்படும் "வக்கீல்" பிரசுரங்கள் என்ற புத்தகங்களும் அனுப்பப்படும். ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சாதாரணமாய் வி. பி. பி. கிடையாது.

2. சந்தாத் தொகையை மணியார்டர் மூலம் அனுப்ப:—

மானேஜர், "வக்கீல்" காரியாலயம்
தபால் பெட்டி 26 :: கும்பகோணம்
(தென் இந்தியா)

என்ற விலாசத்துக்கு அனுப்பவும்.

3. மணியார்டர் கூப்பனில் புரியும்படி ஒவ்வொரு எழுத்தாக—பெயர்; விலாசம்; தபாலாபீஸ்; ஜில்லா—இவைகளை எழுதவும்.

4. சிலோன் நேயர்கள் வி. பி. பி. மூலம் அனுப்பும்படி எழுதி ரூ. 6—7—0 செலுத்தி விசேஷ வருட சந்தாதாரர்களாகச் சேர்ந்து கொள்ளலாம்.

5. வெளிநாட்டிலிருந்து சந்தா தொகையை பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் மூலம் அனுப்பலாம்.

"வக்கீல்"

பொது மக்களுக்கான சட்ட
விஷயங்களை விளக்கும் மாதப் பத்திரிகை

மலர் 3 மே 1951 இதழ் 5

பொருள் அடக்கம்

	பக்கம்
குறிப்புகளும் - செய்திகளும்	
குடியரசின் விரோதிகள்	3
புதிய சட்டங்கள்	
சுருக்கியும் - வரிசையாகவும்	4
கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் சர்க்கார் அறிக்கைகள்	5
வழக்கும் - தீர்ப்பும்	
* மைனர் கார்டியன் கிரய சாசனம்	8
* இந்து ஸ்திரீகள் சொத்துரிமைச் சட்டம்	10
வரிகள்	13
கேள்வி - பதில்	16
கண்ட்ரோல்	18
இதுவும் உதவும்	19

“ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை”

1 மண்டலம் (48 நாள்) கிரமப்படி

பூஜை செய்யப்பட்டது

ஆயுள் பூராவும் பலன் தரக்கூடிய வெள்ளி ரக்ஷை ரூ. 43—12—0. தற்போது அனுப்பவேண்டியது ரூ. 5—12—0. ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை வேண்டியவர்கள் கோரும் கோரிக்கைகளை எழுதி தற்போது ரூ. 5—12—0 மணியார்டர் செய்யவும். கீழே கொடுத்துள்ளபடி நம்மிடம் ரக்ஷை வாங்கிய பிறகு 108 நாளைக்குள் நன்மையான பலன்களை அனுபவித்து பாக்கி ரூ. 38—0—0 அனுப்பவும். தற்போது கேட்கும் ரூ. 5—12—0 ரக்ஷை வெள்ளி கவரிங்குக்கும், தபால் ரிஜிஸ்டர் செலவுக்கும், விளம்பர செலவிற்குமாக மேலேகண்ட தொகை கேட்கப்படுகிறது.

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ரக்ஷை அணிவதால் ஏற்படும் நன்மைகள்

1. சுகசரீரிகளாயும், எப்போதும் போஜனாதிகளில் குறைவின்றியும் இருப்பார்கள்.
2. குடும்ப ஒற்றுமை, குடும்ப அபிவிருத்தி, தனதான்யாதிகள், வாக்குப் பலிதம், குடும்ப நிர்வாக திருப்தி.
3. சகோதரம் ஒற்றுமை. சகோதரமில்லாதவர்களுக்கு சகோதரம் ஏற்படும். பிரிந்த சகோதரர் கூடுவர்.
4. மாதுர் அபிவிருத்தி. வாகன அபிவிருத்தி. பூமி கட்டிட அபிவிருத்தி ஏற்படும்.
5. புத்திரர்களுக்கு ரோக நிவர்த்தி. மலடு உடையவர்களாயிருந்தாலும் புத்திரம் ஏற்படும்.
6. சத்துருக்கள் பங்கமடைவார்கள். தீராத ரோகமும் தீரும்.
7. வாலிபர்களுக்கு நல்ல குணவதி லபிப்பார்கள். மற்றவர்களுக்கு ஸ்திரீ நேசமும், ஸ்திரீயின் சிசுருஷையும் கிடைக்கும். பால்யப் பெண்கள் அணிவதால் சத்புருஷனை அடைவார்கள். மற்றவர் அணிவதால் கணவன் ஒற்றுமை. பிரிந்த கணவனை அடைவார்கள்.
8. ஸ்திரீகள் அணிவதால் மாங்கல்ய தீர்க்கமும், புருஷர் அணிவதால் ஆயுள் தீர்க்கமும்.
9. வாலிபர் அணிந்தால் பிதுருவின் பிரீதியை அடைவார். விசேஷ பாக்கியமும், லக்ஷ்மி கடாக்ஷமும் ஏற்படும்.
10. கல்வி பயிலுபவர்கள் அணிந்தால் கல்வியின் தேர்ச்சியும், படித்தவர்கள் அணிந்தால் உத்தியோகமும் கிடைக்கும். விவசாயிகளுக்கு கிருஷிகம் மேன்மைப்படும். வியாபாரிகளுக்கு வியாபார அபிவிருத்தி ஏற்படும்.
11. அவரவர்கள் செய்யும் தொழிலில் நல்ல ஆதாயம் கிடைக்கும்.
12. நல்ல போக போக்கியமும், லாபத்தை உத்தேசித்து பணவிரயமும் ஏற்படும்.

N. B. அதமர்களும், நாஸ்திகர்களும் விசேஷ பலன்களை எதிர்பார்க்க முடியாது. 2. ரக்ஷை ஆர்டர் செய்பவருக்கு ஆர்டர் கிடைத்த 9-ம் நாள்தான் ரக்ஷை பிரசாதத்துடன் அனுப்பப்படும். 3. வி. பி. பி. யில் அனுப்ப சாத்தியப்படாது. 4. வெளிநாட்டு நேயர்கள் இரட்டிப்பு தொகைக்குப் பிரிட்டிஷ் போஸ்டல் ஆர்டர் வாங்கி அனுப்பவும்.

கோட்டமருதூர்

ஸ்ரீ மஹாலக்ஷ்மி ஜோதிஷ ஆபீஸ்

அரகண்டநல்லூர் P. O. (S. A. Dt.)

வக்கீல்

வாழிய செந்தமிழ் ! வாழ்க நற்றமிழர் !

மலர் 3 | மே 1951 | இதழ் 5

குறிப்புகளும் - செய்திகளும்

குடியரசின் விரோதிகள்: இந்தியப் பொதுமக்கள் ஓர் வகை அதிகாரியை, ஓர் வகைச் சர்க்கார் ஊழியரை, நன்றாகக் கவனித்து வரவேண்டும். இவ்வித அதிகாரிகள் யார்? அவர்களுடைய பெயர் தெரியாது; இருந்தாலும் அவர்களுடைய நடத்தையிலிருந்து அவர்களை அடையாளம் கண்டுபிடித்து விடலாம். அவர்களுடைய கண்கள் இயற்கைக்கு மாறாக வேலை செய்வதிலிருந்து இவர்கள் யார் யார் என்றும் சொல்லிவிடலாம். உணவுத் தானியங்கள் சட்ட விரோதமாக லாரிலாரியாக எடுத்துச் செல்லப்படுபவை இந்த அதிகாரியின் கண்களில் புலப்படமாட்டா; ஆனால் ஒரு நாட்டுப்புற அப்பாவியின் தலைமீதுள்ள சோற்று மூட்டையை இவ்வதிகாரி துப்பறிந்து கண்டுபிடித்து விடுவார்! இவருடைய கண் எதிரில் வண்டி வண்டியாக வெல்லம் ஏற்றப்பட்டு அவருக்குத் தெரிந்த இடத்திலேயே பதுக்கப்படும்போது இவ்வதிகாரி கண்ணைச் சிமிட்டி விடுவார்; ஆனால் கால் வீசை அரை வீசை வெல்லத்தைச் சட்டம் தெரியாமல் விற்று விடும் குடியானவர் கையில் இவர் விலங்கு மாட்டுவார்! பேல் பேலாக மறையும் ஜவுளி மலைகள் இவர் கண்ணில் புலப்படா; ஆனால் எங்கேயாவது அரை கஜம் கால் கஜம் சட்ட விரோதமாக விற்கப்பட்டால் இவர் உடனே பாய்ந்து அதைக் கண்டு பிடித்து விடுவார்! இன்னும் சில அடையாளங்கள் இவருக்கு உண்டு. இவர் தமக்கு மேலிருக்கும் அதிகாரிகளை நன்றாக "காக்காய்" பிடித்து விடுவார்; பதுக்கல், கள்ள மார்க்கெட் வியாபாரிகள் ஒருவரும் இவரைக் கண்டு பயப்பட மாட்டார்கள்; இவ்வதிகாரி செய்வது சட்டப்படி தவறு என்று ஒருவரும் சொல்ல முடியாது; அவர் செய்யாமலிருப்பது தவறு என்றும் கூசவிட ஒருவராலும் முடியாது. இருந்தாலும் இவ்வித அதிகாரி பொதுமக்களின் துரோகி; இவர் குடியரசின் விரோதி. இவர்களை அப்புறப்படுத்துவது நமது ஜனநாயக சர்க்காரின் முதல் கடமையாகும்; பொதுமக்களும் இவ் விஷயத்தில் சர்க்காருக்கு உதவி செய்து இவர்கள் யார் யார் என்று பட்டவர்த்தனமாகச் சுட்டிக் காண்பிக்க வேண்டும். இப்பெருச்சாளிகளின் எண்ணிக்கை அதிகரிக்கு முன் இவர்களை நாலாபக்கங்களிலிருந்தும் வேட்டையாடி ஒதுக்காவிட்டால்—மக்கள் சுதந்தரத்தின் ருசியைக் காணமுடியாது; கள்ளமார்க்கெட் பதுக்கல்காரர்களும் இவர்களும் ஒன்று சேர்ந்து நம்மை ஆட்சி புரிய ஆரம்பித்து விடுவார்கள்!

* * *

வீண் வியாஜ்யத் தடைச் சட்டப்படி தடுக்கப்பட்டார்:-சென்னை வீண் வியாஜ்யத் தடைச் சட்டப்படி (The Vexatious Litigation Prevention Act - 1949) சென்னை அட்வகேட் ஜெனரல் அவர்கள் திரு. டி பால சுப்பிரமணிய பிள்ளை என்பவர் மீது கொடுத்திருந்த மனுவின் பேரில் பிரதம நீதிபதி ராஜமன்னார் அவர்களும் நீதிபதி சோமசுந்தரம் அவர்களும் 15-3-51-ல் தீர்ப்பளித்தனர். எதிர் மனுதார் சரியான காரணங்களின்றி வீண் வியாஜ்யங்களைப் போடுவதே பழக்கமாக வைத்துக்கொண்டிருப்பதாயும், குறிப்பாக அவர் ஹைகோர்ட் அதிகாரிகள் மீதும், நீதிபதிகள் மீதும் கூட வழக்குகள் போட்டுக் கொண்டிருக்கிறாரென்றும் நீதிபதிகள் அபிப்பிராயப்பட்டனர். இனி அவர் ஹைகோர்ட்டின் அனுமதியின்றி சென்னையிலும் ஜில்லா ஜட்ஜின் அனுமதியின்றி மற்ற இடங்களிலும் எவ்வித சிவில் அல்லது கிரிமினல் நடவடிக்கைகள் போடக்கூடாதென்றும் அவர்மீது நீதிபதிகள் தடை உத்தரவு பிறப்பித்தனர். வீண் வழக்குகள் போட்டுக்கொண்டே இருப்பவர்களை இவ்விதம் தடை செய்ய அச்சட்டத்தில் அதிகாரம் இருக்கிறது.

* * *

புதிய சட்டங்கள்

சுருக்கியும்-வரிசையாகவும்

1951 ஆம் வருடத்திய (மத்திய) சட்டங்கள்

[இந்திய யூனியன் பார்லிமெண்டால் நிறைவேற்றப் பட்டவை. பிராக்கெட்டுக்குள் இருப்பது ஜனதிபதி அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட தேதி. இதற்குமுன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டன.]

8. ரயில்வே செலவு அனுமதிச் சட்டம்

The Appropriation Railways No. 2 Act 1951 (15—3—1951) இந்திய ரயில்வேக்களின் செலவுக்காக 31—3—1952 உடன் முடியும் ஒரு வருடத்தில், இந்தியப் பொதுநிதியிலிருந்து ரூ. 3,46,28,35,000 செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

9. கட்டாய நிலச் சுவாதீனச் சட்டத் திருத்தம்

Requisitioned Land, Continuance of Powers Amendment Act 1951. இச்சட்டம் C ராஜ்யங்களில் 1-4-1952ல் ரத்தாகும், A ராஜ்யங்களில் ஏற்கனவே சர்க்காரால் சுவாதீனம் செய்துகொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கும் இடங்களுக்கு 1-4-1952லும் மற்றப்படி 1-4-1951லும் அச்சட்டம் ரத்தாகும்—என்று திருத்தப்பட்டிருக்கிறது. அதாவது A ராஜ்யங்களில் இச்சட்டத்தின்படி 1-4-1951க்குப் பின் புதிதாகச் சர்க்கார் ஒரு தனி நபரின் சொத்தைச் சுவாதீனம் எடுத்துக்கொள்ள முடியாது.

10. டில்லி, ஆஜ்மீர்—மீர்வாரா ஜாகை கட்டுப்பாடு சட்டத் திருத்தம்

The Delhi and Ajmer Merwara Rent control amendment Act 1951 (21-3 1951)

11. வருமானவரி (விசாரணைக் கமிஷன்) திருத்தச் சட்டம்

Taxation on Income-Investigation Commission - Amendment Act 1951 (21-3-1951) வருமான வரி கொடுக்காமல் சர்க்காரை ஏமாற்றுபவர்களின் கணக்குகளைப் பரிசீலனை செய்து, வரி விதிக்கப் பிரத்தியேகமாக மத்திய சர்க்காரால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் கமிஷனின் கெடு 31-3-1951 உடன் முடிவடைவதாக இருந்தது. இது இப்பொழுது திருத்தப்பட்டு, இன்னும் தேவையான காலத்திற்கு இக்கமிஷனை வைத்துக்கொள்ள, மத்திய சர்க்காருக்கு இச்சட்டம் அதிகாரம் கொடுக்கிறது.

12. அரசாங்கச் செலவு அனுமதிச்சட்டம்

The Appropriation Vote on Account Act 1951 (21-3-1951)—1-4-1951 முதல் ஆரம்பிக்கும் வருடத்தில் மத்திய அரசாங்கப் பொதுச் செலவுக்காக இந்தியப் பொது நிதியிலிருந்து ரூ. 74,18,44,000 எடுத்துச் செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

13. இந்தியத் தீர்வைச் சட்டத் திருத்தம்

Indian Tariff Amendment Act 1951 (29-3-1951).—இந்தியத் தீர்வைச் சட்டம் திருத்தப்பட்டிருக்கிறது.

14. ரயில்வே செலவு அனுமதிச்சட்டம்

Appropriation Railways No. 3 Act 1951. (29-3-1951)—இந்திய ரயில்வே செலவுக்காக 31-3-1951 உடன் முடியும் ஒரு வருடத்திற்கு இந்தியப் பொது நிதியிலிருந்து இன்னும் 30 லக்ஷரூபாய் செலவு செய்ய மத்திய சர்க்காருக்கு அனுமதி கொடுக்கும் சட்டம்.

1951 ஆம் வருடத்திய (சென்னை) சட்டங்கள்

[சென்னைச் சட்ட மன்றத்தால் நிறைவேற்றப்பட்டவை. சட்டம் சென்னை-சர்க்கார் கெஜட்டில் பிரசுரம் செய்யப்பட்ட தேதி பிராக்கெட்டில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்கு முன் உள்ள சட்டங்கள் "வக்கீல்" முந்திய இதழ்களில் வரிசையாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.]

1. இணைக்கப்பட்ட சமஸ்தானங்களுக்கு ஜில்லா போர்டில் பிரதிநிதி நியமனச் சட்டம்

(27-3-1951) சென்னை ராஜ்யத்துடன் இணைக்கப்பட்ட புதுக்கோட்டைக்குத் திருச்சி ஜில்லா போர்டில் 6 அங்கத்தினர்களும், பங்கனப்பள்ளிக்குக் கர்னூல் ஜில்லா போர்டில் 1 அங்கத்தினரும், சாந்தூருக்கு பெல்லாரி ஜில்லா போர்டில் 1 அங்கத்தினரும் சர்க்காரால் நியமிக்கப்படுவார்கள்.

கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தின் கீழ் சர்க்கார் அறிக்கைகள்.

சென்னை-கிராமப் பஞ்சாயத்துச் சட்டத்தில் பல விஷயங்களைப் பற்றி விதிகள் ஏற்படுத்த ராஜ்ய சர்க்காருக்கு அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. இந்த அதிகாரத்தை உபயோகித்து, சென்னை சர்க்கார் 27-3-1951 ல் 51 அறிக்கைகள் பிறப்பித்து அவை மூலம் பல விதிகள் ஏற்படுத்தி இருக்கின்றனர். இவைகள் சுருக்கமாகப் பின் வருமாறு:

அறிக்கை 1. ஒவ்வொரு பஞ்சாயத்திற்கும் அதன் ஜனத் தொகைக்குத் தக்கப்படி பஞ்சாயத்து அங்கத்தினர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்படும். பஞ்சாயத்துத் தலைவர் (பிரசிடெண்ட்) இந்த எண்ணிக்கையில் சேர்ந்தவரல்லர்.

பஞ்சாயத்தின் ஜனத்தொகை				அங்கத்தினர்கள் எண்ணிக்கை
20,000மும் மேற்பட்டு இருந்தால்				15
20,000க்குட்பட்டு,		15,000க்குமேல்		14
15,000	,,	12,000	,,	13
12,000	,,	10,000	,,	12
10,000	,,	7500	,,	10
7500	,,	5000	,,	8
5000	,,	2500	,,	7
2500	,,	1000	,,	6
1000க்குட்பட்டிருந்தால்				5

அறிக்கை 2. 'ஜாப்தாவில்' கண்ட வகுப்பினருக்கு (Scheduled castes) மொத்த அங்கத்தினர்களில் 5ல் 1 பங்குக்கு மேல் ஒதுக்கப் படமாட்டாது. மேலும் ஜனகணிதையில் ஒரு கிராமத்தின் ஜனத்தொகையில் பாதிக்கு மேற்பட்டவர்கள் 'ஜாப்தா' வகுப்பினராக இருந்தால் அந்தப் பஞ்சாயத்தில் அவர்களுக்குத் தனியாக ஸ்தானங்கள் ஒதுக்கப்படமாட்டா.

அறிக்கை 3. ஒரு தேர்தலில் எந்த வார்டுக்காவது யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படாமல் போய், இரண்டாவது தேர்தல் நடத்தி, அதிலும் யாதொரு அங்கத்தினரும் தேர்ந்தெடுக்கப்படா விட்டால் பாக்கி அங்கத்தினர்கள் கூடி, ஒருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். உப தலைவரை எப்படித் தேர்ந்தெடுப்பார்களோ அதே முறையில் தான் தேர்ந்தெடுக்க வேண்டும்.

அறிக்கை 4. தேர்தலில் ஒரு போலிங் ஆபீசரோ, குமாஸ்தாவோ, தேர்தல் இடத்தில் வேலை பார்ப்பவரோ ஒரு வாக்காளர் (வோட்டர்) யாருக்கு 'ஓட்' செய்தார் என்று நேராகவோ, ஜாடையாகவோ தெரிவித்தால் அவருக்கும், தெரிவிக்கப்பட்டவருக்கும் ரூ.100 வரை அபராதம் விதிக்கப்படலாம்.

அறிக்கை 5. பஞ்சாயத்துத் தேர்தலில் போட்டியிடுபவர், நியமனத்தாள் தாக்கல் செய்யும் தேதியிலோ, தேர்தல் தேதியிலோ அப்பஞ்சாயத்துடன் அவர் ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டிருந்து அது அன்று ஊர்ஜிதத்தில் இருந்தால், அவர் போட்டியிட அனுமதிக்கப்பட மாட்டாரென்றும், ஆனால் விதி விலக்களிக்கச் சர்க்காருக்கு அதிகாரமுண்டென்றும் பஞ்சாயத்துச் சட்டம் செக்ஷன் 16 (2)ல் இருக்கிறது. அதை அனுசரித்து, கீழ்க்கண்டபடி சர்க்காரால் விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. அதாவது (1) பஞ்சாயத்துடன் ஒரு ஸ்தாவர சொத்தின் குத்தகை அல்லது விற்பனை சம்பந்தமாகவாவது (2) பணலேவாதேவி அல்லது அதற்கு ஜாமீன் சம்பந்தமாகவாவது (3) பஞ்சாயத்து சம்பந்தமான விளம்பரங்கள் பிரசுரமாகும் பத்திரிகை வைத்திருப்பது சம்பந்தமாகவாவது (4) பஞ்சாயத்துடன் வருடத்தில் ரூ. 1500க்கு மேற்படாத வியாபாரம் செய்வது சம்பந்தமாகவாவது எவ்வித ஒப்பந்தங்களில் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தாலும் பாதகமில்லை. அவர் அப்பஞ்சாயத்து அங்கத்தினராக வரப் போட்டியிடலாம். அங்கத்தினராக வந்த பிறகு மேற்கண்ட ஒப்பந்தங்களில் சம்பந்தப்பட்டாலும் அவர் பதவியை இழக்கமாட்டார். என்று விதிவிலக்கு அளிக்கப் பட்டிருக்கிறது.

அறிக்கை 6. பஞ்சாயத்துச் சட்டத்தில் சில சந்தர்ப்பங்களில் ஒருவர் அங்கத்தினராக வர முடியாதென்றும், அங்கத்தினராக இருக்கும் ஒருவரும் சில சந்தர்ப்பங்களில் தம் பதவியை இழப்பார் என்றும் செக்‌ஷன்கள் 13, 15, 16, 17ல் விவரிக்கப்பட்டிருக்கிறது. இவ்விஷயத்தில் ஏதாவது தகராறு அல்லது சந்தேகம் ஏற்பட்டால் அப்பஞ்சாயத்து இருக்கும் இடத்திற்கு அதிகாரமுள்ள டிஸ்ட்ரிக்ட் முன்சீப்புக்கு மனுப் போடவேண்டும். அவருடைய தீர்ப்பே முடிவானது. இரண்டு முன்சீப்புகள் இருந்தால் பிரதான முன்சீப்புக்குத் தான் அதிகாரம். ஆனால் ஜில்லா ஜட்ஜு ஒரு முன்சீப்பிடம் இருக்கும் மனுவை அதே ஜில்லாவிலுள்ள வேறு முன்சீப்புக்கு மாற்ற அதிகாரமுண்டு.

அறிக்கை 7. பஞ்சாயத்துத் தலைவர் தாற்காலிகமாக வெளியே போகும் போது அவருடைய அலுவல்களை யார் எப்படிப் பார்க்க வேண்டும் என்பது பற்றியும், தலைவருடைய ஸ்தானம் காலியானால் என்ன செய்வது என்பது பற்றியும்.

அறிக்கை 8. பஞ்சாயத்து அங்கத்தினர்கள் தீர்மானங்கள் கொண்டு வருவது பற்றியும் கேள்விகள் கேட்பது பற்றியும். **அறிக்கை 9**. நிர்வாக அதிகாரி லீவில் போகும்போது அவருடைய வேலையை யார் பார்ப்பது என்பதுபற்றி. **அறிக்கை 10**. சர்க்கார் விடுமுறை நாட்கள் தான் பஞ்சாயத்து ஆபீசுக்கும், அவர்கள் நடத்தும் ஸ்தாபனங்களுக்கும் விடுமுறை நாட்களாகும். ஆனால் கல்வி ஸ்தாபனங்களுக்கு, சென்னை கல்வி இலாக்கா விதிகளின்படி விடுமுறை நாட்கள். வேறு நாட்களில் விடுமுறை விட இன்ஸ்பெக்டரின் அனுமதி வேண்டும். **அறிக்கை 11**. இரண்டு அல்லது அதிகமான பஞ்சாயத்துக்களுக்குச் சேர்த்து அதிகாரிகள் அல்லது சிப்பந்திகள் நியமிப்பது பற்றி. நிர்வாக அதிகாரி மட்டில் ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் தனித் தனியாகத்தான் இருக்கவேண்டும். **அறிக்கை 12**. பஞ்சாயத்தார்கள் கேட்கும் போது பஞ்சாயத்துத் தஸ்தாவேஜுகளை நிர்வாக அதிகாரி அவர்களிடம் காண்பிக்க வேண்டும். ஆனால் அப்படிக் காண்பிப்பதால் பஞ்சாயத்துக்குக் கெடுதி என்று தோன்றினால் நிர்வாக அதிகாரி காண்பிக்க மறுக்கலாம். ஆனால் இன்ஸ்பெக்டருக்கு இதைத் தெரிவித்து அவர் சொல்லும் விதம் அவர் நடக்க வேண்டும். **அறிக்கை 13**. பஞ்சாயத்துக்கள் கூட்டம் கூடுவது பற்றியும் கமிட்டிகளைப் பற்றியும். **அறிக்கை 14**. கூட்டுக்கமிட்டிகளைப் பற்றியது. **அறிக்கை 15**. அவசர காலங்களில் பஞ்சாயத்துச் செய்ய வேண்டிய வேலையைக் கலெக்டர் அல்லது இன்ஸ்பெக்டர் செய்வது பற்றி. **அறிக்கை 16**. நீர்ப்பாசன சம்பந்தமான வேலைகளைச் சர்க்கார் ஒரு பஞ்சாயத்துக்கு மாற்றுவது பற்றியது. **அறிக்கை 17, 18**. வீட்டுவரி விதிப்பது பற்றிய விதிகள். **அறிக்கை 19**. வருமான வரி விதிப்பது பற்றிய விதிகள். **அறிக்கை 20**. வண்டி வரி விதிப்பது பற்றிய விதிகள். **அறிக்கை 21, 22**. வரிவசூல் பற்றிய விதிகள். **அறிக்கை 23**. எந்த எந்த வரிகளை எந்த எந்த உபயோகத்திற்காக மட்டில் செலவு செய்யவேண்டுமென்பது பற்றிய விதிகள். **அறிக்கை 24**. சந்தைகள்பற்றி. **அறிக்கை 25**. வண்டி ஸ்டாண்டுகள் பற்றி. **அறிக்கை 26**. தொழிற்சாலைகளைப் பற்றியது. (எந்த எந்தத் தொழில்கள் நடத்த லைசென்சு வேண்டுமென்பது) **அறிக்கை 27**. யந்திரங்கள் வைப்பது விதிவிலக்குகள். **அறிக்கை 28**. வீடுகளுக்கு நம்பர் போடுவதுபற்றி. **அறிக்கை 29**. பஞ்சாயத்து வரவு செலவு கணக்குகள் பற்றி. **அறிக்கை 30**. லைசென்சு மனுவின் பேரில் 30 தினங்களுக்குள் பஞ்சாயத்து யாதொரு உத்தரவும் தெரிவிக்காவிட்டால், லைசென்சு கொடுக்கப்பட்டதாகப் பாவிக்கப்படும் என்று சட்டத்தில் இருக்கிறது. லைசென்சு மனு, மேல் அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டால் 60 தினங்களுக்குள் அதன் பேரில் ஏற்பட்ட உத்தரவைத் தெரிவிக்கவேண்டுமென்று இவ் விதியில் நிர்ணயிக்கப் பட்டிருக்கிறது. **அறிக்கை 31**. கிராமப் பெரிய தனக்காரரும், கர்ணமும் கிராம கணக்குகளிலிருக்கும் விஷயங்களைத் தெரிவிக்கும்படி பஞ்சாயத்துக் கேட்கலாம். **அறிக்கை 32**. பஞ்சாயத்துச் சட்டக் குற்றங்களை ராஜி செய்து கொள்வது பற்றி

அறிக்கை 33. பஞ்சாயத்துத் தலைவர், உப தலைவர், அங்கத்தினர்கள் இவர்களின் பிரயாணச் செலவைப் பற்றி. **அறிக்கை 34.** பஞ்சாயத்து உப தலைவரைத் தேர்ந்தெடுக்கும் முறை. **அறிக்கை 35.** பஞ்சாயத்துத் தலைவர் உப தலைவர் அங்கத்தினர்கள் செய்யும் ராஜீநாமாவைப் பற்றி. **அறிக்கை 36.** கமிட்டிகளைப் பற்றியது. **அறிக்கை 37.** பஞ்சாயத்துப் பணத்தை, பாங்கில் வைத்திருப்பது பற்றியது. **அறிக்கை 38.** கணக்குகளைப் பரிசீலனை செய்வது பற்றியும், சட்ட விரோதமாய்ச் செலவு செய்தவர்களிடமிருந்து தொகையைத் திருப்பி வாங்குவது பற்றியும் (Surcharge) **அறிக்கை 39.** இன்ஸ்பெக்டர் முதலிய மேல் அதிகாரிகளைப் பற்றி. **அறிக்கை 40.** லைசென்சுகளின் வாசகம் முதலியவை. **அறிக்கை 41.** நிர்வாக அதிகாரி வரி விதிப்பு லைசென்சு விஷயமாய் எவருக்கும் சம்மன் அனுப்பி வரவழைக்கலாம், தஸ்தவேஜுகளையும் தாக்கல் செய்யும்படி கேட்கலாம். **அறிக்கை 42.** பஞ்சாயத்து அதிகாரிகள் ரப்பர் ஸ்டாம்பு கையெழுத்து உபயோகிப்பது பற்றியது. **அறிக்கை 43.** நகல் கொடுப்பது பற்றியது. **அறிக்கை 44.** பொது குளம், கிணறு அல்லது சொந்தக் குளம், கிணறு இவைகளின் உபயோகத்தைப் பஞ்சாயத்து ஒழுங்கு படுத்துவது பற்றியது. **அறிக்கை 45.** கக்கூசு சுத்தம் செய்வது பற்றியது. **அறிக்கை 46.** மயானம் புதைபூமி பற்றி. **அறிக்கை 47.** பொது அல்லது சொந்தச் சந்தைகளைப் பற்றி. **அறிக்கை 48.** லைசென்சு முதலியவை சம்பந்தமான அப்பீல்கள் 30 தினங்களுக்குள் செய்ய வேண்டும். **அறிக்கை 49.** நோட்டீசுகள் பிரசுரம் செய்யும் முறை. **அறிக்கை 50.** தலைவர் பதவியிலிருந்து நீங்கும் போது, தலைவர் பதவிக்கு வருபவரிடமாவது அவர் இல்லாவிட்டால் ஜில்லா பஞ்சாயத்து ஆபீசர் அல்லது டிப்டி பஞ்சாயத்து ஆபீசரிடம் 'சார்ஜ்' கொடுக்க வேண்டும்.

அறிக்கை 51:- பஞ்சாயத்துச் சட்டத்தின் செக்ஷன் 133ல் பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரிக்கு ஒரு புதிய அதிகாரம் கொடுக்கப் பட்டிருக்கிறது. அதாவது சப் ரிஜிஸ்ட்ராரைப்போல் சில பத்திரங்களைப் பதிவு (ரிஜிஸ்டர்) செய்யும் அதிகாரம். அந்தப் பஞ்சாயத்து எல்லைக்குள் சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீசு இல்லாவிட்டால், சில குறிப்பிட்ட வகைப் பத்திரங்களை அப்பஞ்சாயத்தின் நிர்வாக அதிகாரி (Executive Authority) ரிஜிஸ்டர் செய்யலாமென்று 'இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் ரிஜிஸ்ட்ரேஷன்' என்ற தலைமை அதிகாரி அவருக்கு அதிகாரம் கொடுத்தால்தான் அவ்விதமான பத்திரங்களை நிர்வாக அதிகாரி ஒரு சப்ரிஜிஸ்ட்ராரைப்போல் ரிஜிஸ்டர் செய்ய முடியும். அவ்விதம் அதிகாரம் பெற்ற பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் இரண்டு வகைப் பத்திரங்களைத்தான் ரிஜிஸ்டர் செய்யலாம். அதாவது (1) ஸ்டாம்பு, ரிஜிஸ்டர் கட்டணம் இரண்டும் வேண்டியதில்லை என்று விதிவிலக்கு அளிக்கப்பட்டிருக்கும் பத்திரங்களும் தஸ்தாவேஜுகளும். (2) தாற்காலிக உபயோகமுள்ள தஸ்தாவேஜுகளென்று சர்க்காரால் விதிகள் மூலம் குறிப்பிடப்படும் தஸ்தாவேஜுகள். இவை என்ன என்று இப்பொழுது சர்க்காரால் இவ்விதி ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. அவையாவன:—ரூ. 100 பிரதிப் பிரயோஜனம் அல்லது மதிப்புக்குட்பட்ட கீழ்க்கண்ட தஸ்தாவேஜுகள்:—(1) பணம் அல்லது ஜங்கம சொத்தைப் பெற்றுக் கொண்டதற்கு ரசீது. (2) பிரமாணப் பத்திரிகைகள். (3) ஜங்கம சொத்துக்களைப் பற்றிய அடகு சீட்டுகள் (4) சாதாரணப் பத்திரங்கள் (Bonds). (5) விவசாய நிலங்களைப் பற்றிய (எவ்வளவு கெடுவாக இருந்தாலும்) குத்தகைச் சீட்டுகளும் முச்சலிக்காக்களும். (6) கோவாப்ரேட்டிவ் சொசைட்டி அல்லது நில அடமானப் பாங்கு இவைகளுக்கு எழுதிக்கொடுக்கப்படும் பத்திரங்களும் அடமானங்களும் (7) மகசூல் அடமானப்பத்திரங்கள் (8) பிராமிசரி நோட்டு. (9) சர்க்கார் சிப்பந்திகள் தங்கள் வேலை சம்பந்தமாக எழுதிக்கொடுக்கும் சொத்து ஜாமீன் பத்திரங்கள். (10) மேலே 5ஆவது ஐட்டமாகக் கண்ட குத்தகைகளைப் பொறுத்து விடுதலை, அல்லது டிரான்சுபர் பத்திரங்கள்,

வழக்கும் தீர்ப்பும்

இப்பகுதியில் நமது சுப்ரீம் கோர்ட், ஹைகோர்ட்டுகள் முதலிய உயர் நீதி மன்றங்களின் நீதிபதிகளால் அளிக்கப்படும் தீர்ப்புகளின் முக்கிய அம்சங்களை ஒட்டி, சட்ட விளக்கம் செய்யப்படும். சட்ட தத்துவங்களை விளக்கும் அன்னிய நாடு உயர் நீதிபதிகளின் அபிப்பிராயங்களையும் நேயர்கள் இங்கே வாசிக்கலாம்.

மைனர் கார்டியன் செய்யும் கிரய சாசனங்கள்.

கோர்ட்: சென்னை ஹைகோர்ட்.
நீதிபதி: நீதிபதி கனம் விசுவநாத சாஸ்திரி அவர்கள்.
ஆதாரம்: 1951 (1) மதராஸ் லா ஜர்னல்—265.

'மைனர்', 'மேஜர்', 'கார்டியன்' என்ற சொற்கள் ஆங்கிலச் சொற்களாக இருந்தாலும் இவை இப்பொழுது தமிழ் மொழியுடன் கலந்து விட்டன. 'மைனர்' என்றால் வயது வராதவர் என்று அர்த்தம். எந்த வயது பூர்த்தியாகும் வரை ஒருவர் "மைனர்" என்பது அந்தந்த நாட்டின் சட்டங்களால் நிர்ணயிக்கப்பட்டிருக் கின்றன. இங்கிலாந்தில் ஒருவர் 21 வயது பூர்த்தியாகும் வரை "மைனர்"; பிறகுதான் "மேஜர்". இந்திய மெஜாரிட்டிச் சட்டப்படி (Indian Majority Act, 1875) ஒரு வருக்கு 18 வயது பூர்த்தியாகும் வரை அவர் "மைனர்". இது பொது விதி. ஆனால் கார்டியன் அண்ட் வார்டு சட்டப்படி (Guardian and wards Act, 1890) ஒரு மைனருக்கு ஜில்லா கோர்ட் அல்லது ஹைகோர்ட்டால் ஒரு கார்டியன் நியமிக்கப்பட்டிருந்தால் மட்டில் அவருக்கு 21 வயது பூர்த்தியாகும் வரை அவர் "மைனர்" எனப்படுவர். பிறகுதான் மேஜர் எனப்படுவர்.

மைனர்களைக் குறித்து ஒரு பொதுவிதி என்ன வென்றால்:—மைனர்கள் ஒப்பந்தம் செய்து கொள்ள முடியாது. மைனர்கள் நேராகச் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள் செல்லமாட்டா. மைனர்கள் ஒப்புக்கொண்டதைக் கோர்ட்டில் வற்புறுத்த முடியாது. உதாரணமாக 17½ வயதுள்ள ஒரு மைனர் நேராக வேறு ஒருவரிடம் கடன் வாங்கிக் கொண்டு, அதற்காக ஒரு பிராமிசரிநோட்டு எழுதிக் கொடுத்திருந்தாலும், அது செல்லாது. அம்மைனர் பொய்யாகத் தமக்கு 18 வயது பூர்த்தியாகிவிட்டதென்று சொல்லி ஏமாற்றி இருந்தாலும் அதே சட்டம் தான்; அதாவது அவர் உண்மையில் மைனராக இருக்கும்போது எழுதிக் கொடுத்த பிராமிசரி நோட்டு செல்லாது. அதேபோல்தான் ஒரு மைனர் நேராகத் தம் சொத்துக்களை விற்றாலும் செல்லாது.

ஆனால் மைனருடைய போஷகருக்கு, அதாவது மைனருடைய "கார்டியனுக்கு" சட்டத்தால் சில உரிமைகள் உண்டு. சில சந்தர்ப்பங்களில் மைனருக்காக அவருடைய கார்டியன் செய்யும் செய்கைகள் மைனரைக் கட்டுப்படுத்தும். ஆனால் இதைத் தெரிந்து கொள்வதற்கு முன் "கார்டியன்" என்பது யாரைக் குறிக்கும் என்று கவனிப்போம்.

சட்ட பூர்வமான 'கார்டியன்'கள் 3 வகைப் படும். அவையாவன:— (1) இயற்கைக் கார்டியன் (Natural Guardian). இது மைனருடைய தகப்பனையும், தகப்பனில்லா விட்டால் தாயையும்தான் குறிக்கும். வேறு ஒருவரும் இயற்கைக் கார்டியன் அல்லர்.

(2) தகப்பனின் 'உயில்' (will) மூலம் நியமிக்கப்படும் கார்டியன் (Testamentary Guardian). அதாவது தகப்பன் தாம் இறந்த பிறகு தம்முடைய மைனர் மக்களுக்கு யார் கார்டியனாக இருக்கவேண்டுமென்று குறிப்பிட ஓர் உரிமை உண்டு. இந்த உரிமை தகப்பனுக்கு மட்டில்தான். மற்ற உறவினர்களுக்கு இந்த உரிமை கிடையாது. தாயாருக்குக்கூட இந்த உரிமை இல்லை. (3) கோர்ட் கார்டியன் (Court Guardian) இயற்கைக் கார்டியனோ, உயில் கார்டியனோ இல்லாத மைனர்களைக் காப்பாற்ற வேண்டிய கடமை அரசாங்கத்தினிடம் தான் இருக்கிறது. இந்த உரிமையைக் கோர்ட் மூலம் செலுத்தவே ஒரு தனிச் சட்டம் இயற்றப்பட்டிருக்கிறது. ஜில்லா கோர்ட்டுகளுக்கும் ஹைகோர்ட்டுகளுக்கும்தான் ஒரு மைனருக்குக் கார்டியன் நியமிக்கும் அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதற்காகப் பிரத்தியேகமாகக் கார்டியன் அண்டு வார்டு சட்டப்படி போடப்படும் மனுவின் பேரில்தான் இக்கோர்ட்டுகளால் கார்டியன் நியமிக்கப்படும். இவ்வித மைனர்கள் 21 வயது பூர்த்தியான பிறகுதான் மேஜராவார்கள். (ஒரு வழக்கில் கட்சிக்காரராகச் சேர்க்கப்பட்டிருக்கும் மைனருக்கு அவ்வழக்கை அம்மைனருக்காக நடத்துவதற்கு மட்டில் நியமிக்கப்படும் வழக்கு—கார்டியன்கள் (Guardian - ad - litem) என்பவர்கள் வேறு. அவர்களுக்கு வழக்கை நடத்த மட்டில்தான் உரிமை. அவர்களைப்பற்றி இங்கே சொல்லப்படவில்லை.)

இவ்வித மூன்று வகை கார்டியன்கள்தான் சட்ட பூர்வமான கார்டியன்கள். இவர்கள் சில சந்தர்ப்பங்களில் மைனருடைய சொத்துக்களைக் கிரயம், அடமானம் முதலிய பராதீனங்கள் செய்யலாம். உதாரணமாக, மைனருடைய சொத்துக்களைக் காப்பாற்றவோ, மைனருடைய சாப்பாடு, படிப்பு, போஷணை முதலிய அத்தியாவசியமான காரியங்களுக்காகவோ மைனருடைய போதுமான சொத்துக்களைச் சமய சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு எவ்விதமான பராதீனமும் செய்ய இக்கார்டியன்களுக்கு அதிகாரமுண்டு. அதுவும் இயற்கைக் கார்டியனுக்கு இருப்பது போல் பூரண அதிகாரம் மற்ற இருவகைக் கார்டியன்களுக்குமில்லை. உயில் கார்டியன் என்பவர் தம்மை நியமிக்கும் தகப்பனின் உயிலில் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டே இந்த அதிகாரத்தைச் செலுத்தலாம். கோர்ட் கார்டியன்கள் தங்களை நியமித்த கோர்ட்டின் அனுமதி பெற்றேதான் இந்த அதிகாரத்தைச் செலுத்த முடியும்.

அவசியமில்லாமல் மைனருடைய சொத்தை அவருடைய கார்டியன் கிரயம் முதலிய பராதீனங்கள் செய்தால் அவை மைனரைக் கட்டுப்படுத்த மாட்டா. அதாவது "நான் மைனராக இருந்தபோது என் சொத்துக்களை என் கார்டியன் விற்பனை செய்ய வேண்டிய நிர்ப்பந்தமாவது அவசியமாவது கிடையாது. ஆகையால் அவரால் செய்யப்பட்ட கிரயம் ரத்து செய்யப்பட வேண்டும். சொத்து என்னிடம் திருப்பவேண்டும்" — என்று ஒரு மைனர் மேஜரானவுடன் கோர்ட்டில் வழக்குத் தொடரலாம். அவர் மேஜராகி 3 வருடங்களுக்குள் இவ்வித தாவா செய்ய வேண்டும் என்பது காலாவதிச் சட்டம். 3 வருடங்களுக்குள் மேஜரானவர் இவ்விதமான தாவா செய்யாவிட்டால் அவருடைய கார்டியன் செய்த கிரயம் முதலிய பராதீனங்கள் உறுதியாகிவிடும். இவை தான் இது சம்பந்தமான பொதுவிதிகள்.

பிரஸ்தாப வழக்கில் ஒரு மைனருடைய சொத்தை விற்பனை செய்தது மேலே சொன்ன மூன்றுவகைக் கார்டியன்களில் எவ்வகையிலும் சேராத ஒருவர். அதாவது மைனருடைய சிற்றப்பன் மைனருடைய குடும்பத்திலிருந்து பாகம் செய்துகொண்டு தனியே போன சிற்றப்பன் கொஞ்சம் சொத்துள்ள மைனர்களுக்கு இவ்விதமான கார்டியன்கள் தாமாகவே தோன்றுவார்கள். அதனால் ஒன்றும் பாதகமில்லை. யாராவது ஒருவர் மைனர்களுடைய சொத்தை நிர்வகித்து மைனரைப் போஷணை செய்து வருவது ஒரு போற்றத்தக்க செய்கையே. சட்டப்படிக்கான ஒருவகை கார்டியனாக இவர்கள் இல்லாவிட்டாலும் நடைமுறையில் கார்டியன் போல் (De facto Guardian) நடந்து மைனருடைய அக்கரையைக் கவனித்து வரும் இவர்

களுக்கும் சில உரிமைகள் இருக்கின்றன. சில சமயங்களில் வேறு வழியில்லாமையால் இவர்கள் மைனருடைய நன்மையையும் அவசியத்தையும் உத்தேசித்து மைனருடைய சொத்துக்களைப் பராதீனம் செய்தாலும் அதைச் சட்டம் அங்கீகரிக்கும். இவ்வழக்குச் சம்பந்தப்பட்டவரையில் மைனருடைய சிற்றப்பன், மைனருடைய கார்டியன் என்ற முறையில் மைனருடைய சொத்துக்களை 7—6—1939ல் விற்று விட்டார். சொத்துக்களும் கிரயதார் வசம் போய் விட்டன. மைனர் இன்னும் சில தினங்களுக்குள் 18 வயது நிரம்பி மேஜராவார் என்பதைக்கூடப் பொருட்படுத்தாமல் இக் 'கார்டியன்' சொத்துக்களை விற்றுவிட்டார். ஆனாலும் மைனர் மேஜராகி 3 வருடங்களுக்குள் தம் கார்டியன் செய்த கிரயத்தை ரத்து செய்ய யாதொரு நடவடிக்கையும் எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால் சும்மாவும் இருந்து விடவில்லை. தம் கார்டியன் செய்த கிரயத்தைப் பொருட்படுத்தாமலே கார்டியனால் கிரயம் செய்யப்பட்ட சொத்துக்களைத் தம்முடையதாகவே பாவித்து அவைகளை மைனராக இருந்து மேஜரானவர் 1943ல் வேறு ஒருவருக்கு விற்று விட்டார். இக்கிரயம் பெற்றவர் 1944ல் தான் தாவா தொடர்ந்தார். அதாவது 1939ல் கார்டியனிடம் கிரயம் வாங்கியவர் மீது: அக் கிரயம் செல்லாதென்றும், 1943ல் தாம் கிரயம்வாங்கி விட்டபடியால் அச்சொத்துக்கள் தமக்குச் சுவாதீனமாகவேண்டுமென்றும் தாவாவில்கேட்டார். கீழ்க்கோர்ட்டுகள் இரண்டிலும் மைனருடைய சொத்துக்களைச் சிற்றப்பன் கிரயம் செய்ய எவ்வித அவசியமாவது நிர்ப்பந்தமாவது ஏற்படவில்லை என்று அபிப்பிராயப்பட்டு வாதிக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தனர். கார்டியனிடம் கிரயம் வாங்கியவர் இவ்வழக்கை ஹைகோர்ட்டுக்குக் கொண்டு போனார். ஹைகோர்ட்டில் தாவா காலாவதியாகி விட்டதென்று வாதாடப்பட்டது. அதாவது கார்டியன் கிரயம் செய்தது 1939ல். மைனர் மேஜரானதும் 1939ல். மேஜரான 3 வருடங்களுக்குள், அதாவது 1942க்குள், தாவா செய்யப்படவில்லை. தாவா தாக்கல் செய்யப்பட்டது 1944ல் தான். ஆகையால் கார்டியன் செய்த சாசனம் உறுதியாகி விட்டதென அவருடைய கட்சி. இதை உயர் நீதிபதி அவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. சட்ட பூர்வமான அதாவது முன் விளக்கப்பட்ட மூவகைக் கார்டியன்கள் (De Leure Guardians) செய்யும் பராதீனங்களை ரத்து செய்யத்தான் 3 வருடங்களுக்குள் தாவா செய்யவேண்டுமென்ற சட்டம்; சட்ட பூர்வமில்லாமல் மைனருடைய விவகாரங்களைத் தாமாகவே கவனித்து வரும் நடைமுறை கார்டியன்கள் (Defacto Guardian) 'கார்டியன்' என்று அலங்காரமாக அழைக்கப்பட்டாலும், இவர்கள் சட்ட பாஷையில் 'கார்டியன்கள்' அல்லர் என்றும், இவர்கள் செய்யும் கிரயம் முதலிய பராதீனங்கள் அவசியமில்லாமல் ஏற்படுத்தப்பட்டிருந்தால், பராதீனம் செய்யப்பட்ட 12வருடங்களுக்குள் தாவா தொடரலாமென்றும், மைனர் மேஜரானவுடன் அவரிடம் சொத்துக்களைக் கிரயம் பெற்றவரும் அதே 12 வருடங்களுக்குள் தாவா செய்யலாமென்றும் அபிப்பிராயப்பட்டு வாதிக்குத் தீர்ப்பளிக்கப்பட்டது. கார்டியனிடம் கிரயம் பெற்றவருடைய அப்பீல் தள்ளப்பட்டது.

[குறிப்பு: இந்து பொதுக் குடும்பச் சொத்துக்கள் சம்பந்தப்பட்டவரையில், அக் குடும்பத்தில் சிலர் மைனர்களாக இருந்தாலும், குடும்பத் தலைவர் என்ற முறையில் செய்யப்படும் பராதீனங்களுக்குச் சட்டம் வேறு. மேலும் தனிச்சொத்துள்ள மைனருடைய சட்ட பூர்வமல்லாத கார்டியனால் கிரயம் செய்யப்பட்ட சொத்துக்களைத் திருப்பி அடைய, காலாவதி கெடு எவ்வளவு என்ற ஒரே பிரச்னைதான் இவ் வழக்கில் எழுந்தது.]

இந்து விதவைகளின் சொத்துரிமைச் சட்ட வழக்கு

கோர்ட்: **சென்னை ஹைகோர்ட்.**
நீதிபதி: **நீதிபதி கனம் சுப்பராவ் அவர்கள்.**
ஆதாரம்: ***1951 (1) மதராஸ் லா ஜர்னல் 334.***

ஒரு இந்து ஸ்திரீயின் பாத்தியங்களைப் பற்றிய சட்டங்களும், அவளுடைய சொத்துரிமை பற்றிய சட்டங்களும் ஆதிகாலங்களிலிருந்து மாறுதலடைந்து கொண்டே வந்திருக்கின்றன.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
187707
சென்னை-600 008

வருங்காலத்தில் இன்னும் பல முக்கிய மாறுதல்கள் அடையலாம். ஒரு இந்து விதவை சம்பந்தப்பட்ட வரையில் அவளுக்கு இன்று இருக்கும் பாத்தியங்களும் உரிமைகளும் சில வருடங்களுக்கு முன்புகூடக் கிடையாது.

1937ல் ஒரு மத்திய சட்டம் இயற்றப்பட்டது. இதற்கு இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டம் (Hindu women's Right to Property Act, 1937) என்று பெயர். இது அகில இந்தியாவிலும் அமுலில் உள்ள சட்டம். இச்சட்டம் 14-4-1937ல் அமுலுக்கு வந்தது.

இச்சட்டம் அமுலுக்கு வருமுன் இருந்த நிலைமை என்னவென்றால்:— ஒரு பிரிபடாத இந்துக் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்துவிட்டால், அவருக்கு ஆண் மக்கள் இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, அவருடைய விதவைக்குக் குடும்பச் சொத்துக்களில் எவ்வித பாத்தியமும் கிடையாது. ஆனால் அவள் அக்குடும்ப ஐவேஜுகளிலிருந்து தம் ஆயுள் வரை ஜீவனும்சம் அடைய பாத்தியமுள்ளவளாக இருந்தாள். அக்குடும்பத்தின் ஐவேஜுக்கும் செலவுக்கும் தக்கபடிக்கும், குடும்பத்தினருடைய வருமானத்திற்கும் அந்தஸ்துக்கும் ஏற்றவாறும் அவளுக்கு ஆயுள்வரை வாழ்க்கைச் செலவு கிடைக்கும். இதை அவள் மனோராஜியாகவும் அடைந்து வரலாம்; தகராறு ஏற்பட்டால் கோர்ட் மூலம் ஜீவனும்ச டிக்ரி பெற்றும் அடைந்து வரலாம்; போதுமான குடும்பச் சொத்துக்களைத் தம் ஜீவனும்சத் தொகைக்கு ஜாமீனாகவும் ஏற்படுத்திக் கொள்ளலாம். இறந்த இந்து, பொதுக் குடும்பத்தைச் சேராத ஒரு தனி நபராக இருந்து அவருக்கு ஆண் மக்கள் இருந்தால், அவருடைய விதவைக்குச் சொத்துக்களில் பாத்தியம் ஒன்றும் கிடையாது. முன் சொன்னது போல் அவளுக்கு ஜீவனும்ச பாத்தியம்தான். தம் கணவன் ஆண் மக்கள் இல்லாது இறந்து போனால்தான் மனைவி அவருடைய தனிச் சொத்துக்களை வார்சாக அடைவாள்.

ஆனால் 14-4-1937 முதல் இந்து விதவையின் நிலைமை மாறியது. அன்றுதான் இந்து ஸ்திரீகளின் சொத்துரிமைச் சட்டம் அமுலுக்கு வந்தது. அன்று தினமோ, அதற்குப் பிறகோ இறந்த ஓர் இந்துவின் விதவைக்கும் தம் கணவனுடைய சொத்துக்களில் ஒரு வார்சு பாத்தியம் இச்சட்டத்தால் அளிக்கப்பட்டது. அவளுடைய ஜீவனும்ச பாத்தியம் மறைந்தது; ஆனால் அதற்குப் பதிலாக அவளுக்கு ஒரு புது உரிமை ஏற்பட்டது. இச்சட்டத்தால் ஏற்பட்ட நிலைமையைக் கவனிப்போம்:—(1) பிரிபடாத இந்து குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர் இறந்தால் அவருக்குக் குடும்பப் பொதுச் சொத்துக்களில் என்ன பாத்தியம் இருந்ததோ, என்ன வீதம் இருந்ததோ, அதை அவருடைய விதவை அடைவாள். அவர் உயிருடனிருந்தால் எப்படி பாகம் செய்து கொள்ளலாமோ அதேவிதம் அவருடைய விதவையும் பாகம் செய்துகொண்டு, தம் வீதத்தைத் தனிமையில் அனுபவிக்கலாம். ஆனால் இந்தப் பாகச்சொத்துக்களை அவ்விதவை சாதாரணமாய்த் தம் ஆயுள் வரையில்தான் அனுபவிக்கலாம். இருந்தாலும் சில அவசியமான நிர்ப்பந்தங்கள் ஏற்பட்டால் இவைகளைப் பாராதீனம் செய்யும் உரிமையும் அவளுக்குண்டு. (2) இறந்த இந்து, ஒரு பொதுக் குடும்பத்தின் அங்கத்தினராக இல்லாமல் தனி நபராக இருந்தாலும், அல்லது பொதுக் குடும்பத்திற்குப் பாத்தியமில்லாத தனிச் சொத்துக்களை வைத்து விட்டு இறந்து போனாலும், அவர் தம் சொத்துக்களை உயில் மூலம் விநியோகம் செய்யாமல் மட்டில் இறந்து போனால் அவருடைய சொத்துக்களில் ஒரு மகனைப் போல் அவருடைய விதவைக்கும் பாத்தியமுண்டு. அதாவது அவ்விதவையும் ஒரு மகனைப் போலவே பாகம் அடைவாள். அவள் மட்டுமல்ல. இறந்தவருக்கு ஒரு மகன் இருந்து முன்னதாகவே அம்மகன் ஒரு மனைவியை விட்டு விட்டு இறந்து போயிருந்தாலும் இறந்த மகனின் விதவைக்கும் மகனைப்போல் ஒருபாகமுண்டு. (இறந்த மகனுக்கு மகனோ, பேரனோ இருந்தால் மட்டில் இவளுக்குப் பேரனைப் போல்தான் பாகம் கிடைக்கும்) மகன் இறந்து போய், மகனுடைய மகனும் தன் மனைவியை விட்டு விட்டு இறந்து போயிருந்தாலும் அவளும் வார்சாவாள். உயில் மூலம் தம் சொத்துக்களை

விநியோகம் செய்யாமல் இறக்கும் இந்துவின் தனிச்சொத்துக்களை இச்சட்டப்படி அவருடைய விதவையும் அவருடைய மகனுடைய விதவையும் பேரனுடைய விதவையும் வார்சாக அடைவார்கள். இது ஒரு பெரிய மாறுதல்.

மேற்கண்ட விதம் 1937ஆம் வருடத்திய சட்டத்தால் ஓர் விதவைக்கு, ஜீவனும்சத்திற்குப் பதிலாக, சொத்தை அடையும் பாத்தியமே கொடுக்கப்பட்டாலும், இச்சட்டத்தைப் பற்றிய ஒரு மகத்தான பிரச்னை கிளம்பியது. அதையும் பார்ப்போம். பழைய இந்திய அரசியல் சட்டப்படி "விவசாய நிலங்களை"ப்பற்றி எவ்விதமான சட்டங்கள் இயற்றவும் மாகாண சட்டசபைகளுக்குத்தான் அதிகாரம். மத்திய சட்டசபைக்கு அதிகாரமில்லை. ஆகையால் 1937ஆம் வருடத்திய மத்திய சட்டம் மாகாணங்களிலுள்ள "விவசாய நிலங்கள்" சம்பந்தப்பட்டவரையில் செல்லாதெனப் பெடரல் கோர்ட்டின் உயர் நீதிபதிகள் ஒரு வழக்கில் தீர்ப்பளித்தனர்.

இதனல் விதவையின் நிலைமையில் ஒரு குழப்பம் ஏற்பட்டது. 14—4—1937க்குப் பின் தம் கணவன் இறந்திருந்தாலும், அவள் தன் புருடனுடைய விவசாய நிலங்களில் புதுச் சட்டப்படி பாகம் கேட்க முடியாமல் போயிற்று. மற்றச் சொத்துக்களில்தான் அவள் பாகம் கேட்க முடிந்தது. வீடு, கட்டிடங்கள், ஜங்கம சொத்துக்கள், ரொக்கம், நகை, பாத்திரங்கள், வரவேண்டிய கடன் தொகைகள் போன்ற மற்ற எல்லாச் சொத்துக்களிலும் அவள் 1937 ஆம் வருட சட்டப்படி பாகம் பிரித்துக் கொள்ளலாம். விவசாய நிலங்களின் வரும்படிக்கேற்றவாறு ஜீவனும்சமும் கேட்கலாம்; ஆனல் அதில் பாகம் கேட்க முடியாதென்று ஏற்பட்டது.

1947ல் மறுபடியும் சட்டம் மாற்றப்பட்டது. சென்னை சட்ட சபையால் இந்து ஸ்திரீகளின் விவசாய சொத்துரிமை விஸ்தரிப்புச் சட்டம் (Madras Hindu Women's Right to Property — Extension to Agricultural Land — 1947) என்ற ஒரு சட்டம் இயற்றப்பட்டது. இச்சட்டத்தால் 26—11—1946 அல்லது அதற்குப் பின் இறக்கும் இந்துக்களுடைய சென்னை மாகாணத்திலுள்ள விவசாய நிலங்களைப் பொறுத்தும் 1937ஆம் வருடத்திய இந்து ஸ்திரீகள் சொத்துரிமை (மத்திய) சட்டம் விஸ்தரிக்கப்பட்டது. அதாவது 26—11—1946 அல்லது அதற்குப்பின் ஒரு இந்து இறந்தால் அவருடைய விதவைக்கு இறந்தவருடைய எல்லாச் சொத்துக்களிலும், (விவசாய நிலங்கள் உள்பட) சொத்துரிமை ஏற்பட்டது.

இந்த இரண்டு சட்டங்களின் உதவியைக் கொண்டுதான் சென்னை மாகாணத்திலிருக்கும் விதவை இறந்த தம் கணவனுடைய எல்லாச் சொத்துக்களிலும் இப்பொழுது சொத்துரிமை அல்லது பாக உரிமை கேட்கலாம்.

பிரஸ்தாப வழக்கில் இவ்விஷயத்தைப் பற்றிய ஓர் சிறிய பிரச்னைதான் ஏற்பட்டது. 26—11—1946க்கு முன் ஒரு சென்னை இந்து இறந்தார். இறந்தவர் ஒரு பிரிபடாத குடும்பத்தைச் சேர்ந்தவர் இறந்தவருக்குத் தகப்பன், சகோதரர், மனைவி இவர்கள் உண்டு. மனைவி தமக்கு இந்து ஸ்திரீகள் சொத்துரிமைச் சட்டப்படி குடும்பச் சொத்தில் பாகம் கிடைக்கவேண்டுமென்று தன் புருஷனுடைய தகப்பன் மீதும் சகோதரர் மீதும் வழக்குத் தொடர்ந்தாள். இறந்த அவருடைய கணவனுக்குக் குடும்பசொத்தில் 3ல் 1 பாகம் உண்டு. அதைத்தான் தனக்கு பிரித்துக் கொடுக்க வேண்டுமென்று அவருடைய விதவை கேட்டாள். விவசாய நிலங்கள் தவிர மற்றச் சொத்துக்களில் அவளுக்கு 3ல் 1 பாகம் கொடுக்கப்பட்டது. ஏனென்ருல் அவளுடைய கணவன் இறந்தது 26—11—1946க்கு முன் பாக இருந்ததால். குடும்பத்துக்கு வரவேண்டிய இரண்டு அடமானக் கடன்கள் இருந்தன. கடன்களுக்கு அடமானமாக வைக்கப்பட்டிருந்த சொத்துக்கள் விவசாய நிலங்களும் வீடுகளும். இக்கடன்களில் வீடுகளைப் பொறுத்த மட்டில் எவ்வளவு வீதாசாரத் தொகை வசூல் செய்யலாமோ அத்தொகையில்தான் அவ்விதவைக்குப் பாகம் கிடைக்குமென்றும், விவசாய நிலங்களைப் பொறுத்து வசூல் செய்யக்கூடிய வீதாசாரக் கடன் தொகையில் அவளுக்குப் பாகம்

கிடைக்காதென்றும் சப்ஜட்ஜ் தீர்ப்புச் செய்திருந்தார். இது தவரென்று விதவை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தாள். ஹைகோர்ட்டில் எல்லா அடமானத் தொகைகளிலும் விதவைக்குப் பாகம் கிடைக்குமென்று உயர் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர். 'அடமானம்' என்பது வீட்டின் பேரில் ஏற்பட்டிருந்தாலும் விவசாய நிலங்களின் மீது ஏற்பட்டிருந்தாலும் அதிலுள்ள 'கடன்' என்பது தனி. இக்கடனைத் தனியாக வசூல் செய்யலாம்; தனியாக ஒருவருக்கு மாற்றலாம். அக்கடனுக்கு ஜாமீனாகச் சொத்துக்கள் இருந்தாலும் இல்லாவிட்டாலும் இக்கடன்கள் ஜங்கம சொத்துக்களைப் போல் பிரிக்கப்பட வேண்டியவைதான் என்றும், கடனை வசூல் செய்யப் பாத்தியமுள்ளவர் அதை விவசாய நிலங்களின் மீது தொடர்ந்து வசூல் செய்ய வேண்டுமா என்பதைப் பார்க்க வேண்டியது அவசியமில்லை என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப்பட்டனர்.

இவ்வழக்கில் வரும் விதவையின் கணவன் 26—11—1946-க்குப் பின் இறந்திருந்தால் இந்தப் பிரச்னை ஏற்பட்டே இருக்காது. ஏனென்றால் சென்னைச் சட்டப்படி அத்தேதிக்குப் பின் இறந்தவர்களுடைய விவசாய நிலங்களிலும் அவர்களுடைய விதவைகளுக்குப் பாக உரிமை உண்டு.

"எலிக்ஸிர் அஸ்வகந்தா"

மகரிஷிகள் ஆயுர்வேத உதவியால் ஆயுள் பலம், தேக புஷ்டி, ஆரோக்யம், யௌவனம் இவைகளை அனுபவித்து உதவி அருளிய சிறந்த ரத்த விருத்தி லேகியம் இதுவே. தொடர்ந்து உட்கொள்ள மலபந்தம் நீங்கி வயிறு, முதுகு, இடுப்பு வலிகள் ஒழித்து நல்ல பசியையும், நித்திரையையும் உண்டுபண்ணும். இல்லற வாழ்க்கையில் இணையில்லா இன்பமளிக்கும். தவிர இரத்த மூலம், குடல் வாய்வு, குடல் இறக்கம் இவைகளைக் குணப்படுத்தும். வயோதிகரை வாலிபர் என எண்ணச் செய்யும் ஔஷதம் எமது "எலிக்ஸிர் அஸ்வகந்தா"வே.

40 தோலா கொண்ட டின் ரூ. 10
தபால் செலவு பிரத்தியேகம்
ஆயுர்வேத வைத்தியர்

T. V. ஜெயராம சாஸ்திரிகள்,
வீரராகவ வைத்திய சாலா,
ஸ்ரீரங்கம் P. O., S. I.

வரிகள்

விற்பனை வரி (மொத்த விற்பனை—வரி விதிப்பு) விதிகள் திருத்தம்.

(Amendment to Madras General sales Tax (Turn over and Assessment) Rules.

விற்பனைவரி விதிகளில் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யப்பட்டிருக்கின்றன:—.

(1) கெடியாரம் அல்லது கைக் கெடியாரம் பழுது பார்க்கும் ஒப்பந்தங்களில் (Works—contract) ரிப்பேர் செய்பவருக்குக் கொடுக்கப்படும் தொகையில் ரெவன்யூபோர்டால் நிர்ணயிக்கப்படும் 100-க்கு 50 சத விகிதத்திற்கு மேற்படாத விகிதத்தைக் கூலிக்காகக் கழித்துக் கொண்டு, பாக்கித் தொகையை மொத்த விற்பனை (Turnover)யாகப் பாவித்து, அதற்கு விற்பனை வரி விதிக்கப்படும்—என்று விதிகளில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

(2) விற்பனை வரிச் சட்டத்தின் செக்ஷன் 8 A-படி ரிஜிஸ்டர் செய்துகொண்ட வியாபாரிகள் (Registered Dealer) சரக்கு விற்பனை செய்யும்போது வசூல் செய்யும் ஜாடா விற்பனை வரியையும் அடுத்த வருடம் ஏப்ரல் 30 தேதிக்குள் சர்க்காருக்குச் செலுத்திவிட வேண்டும். அவ்விதம் ஒரு வியாபாரி சரக்கு வாங்குபவர்களிடம் வசூல் செய்த எல்லாத் தொகைகளையும் செலுத்திவிட்டாரா என்று வியாபாரியின் கணக்குகளைப் பரிசீலனை செய்து பார்க்க விற்பனை வரி அதிகாரிகளுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவ்வதிகாரிகள் ஒரு வியாபாரி வசூல் செய்த வருடத்திற்கு அடுத்த ஒரு வருடம் முடிவதற்குள்தான் இவ்வதிகாரத்தைச் செலுத்தலாமென்று இருந்தது

இப்பொழுது திருத்தப்பட்டிருக்கிறது. இனி இவ்வதிகாரத்தை அடுத்த இரண்டு வருடங்களுக்குள் அதிகாரிகள் செலுத்தலாம்.

(3) மொத்த வியாபாரம் ஒரு வருடத்தில் ரூ. 20,000க்கு மேல் செய்யும் வியாபாரிகள் மாதந்தோறும் கணக்கு அனுப்பி (அதாவது A. 3 நமூனைப்படி கணக்கு அனுப்பி) வரி விதித்துக்கொள்ளலாம். ஒரு வருடத்தில் நடுவில் விரும்பும் இவர்கள் இந்த முறையைப் பின்பற்றலாம் என்று இருந்தது இப்பொழுது மாற்றப்பட்டு, இனி இவர்கள் இந்த முறையைப் பின்பற்றுவதாக இருந்தால், ஏப்ரல் முதல் தேதிக்கு முன்பே இதை விற்பனை வரி அதிகாரிக்குத் தெரிவித்துவிட வேண்டும், என்று விதிகள் திருத்தப்பட்டிருக்கின்றன. வருட நடுவில் சாதாரண முறையிலிருந்து இந்த முறைக்கு இனி மாற்றிக் கொள்ள முடியாது. (வருடம் என்பது ஏப்ரல் 1 தேதி முதல் அடுத்த வருடம் மார்ச்சு 31 தேதி முடிய உள்ள வருடம்) மேலும் A. 3 ரிடர்ன் இனி ஒவ்வொரு மாதமும் 25 ஆம் தேதியிலேயோ அதற்கு முன்போ வரி விதிக்கும் அதிகாரியிடம் போய்ச் சேரும்படி அனுப்பவேண்டும் என்று விதி திருத்தப்பட்டிருக்கிறது. இந்த A. 3 ரிடர்ன் தாற்காலிகமாக (Provisionally) ஒப்புக் கொள்ளப்படும். A. 3 ரிடர்ன் அனுப்பா விட்டாலும், அத்துடன் வரி செலுத்தப்படா விட்டாலும், அனுப்பிய ரிடர்ன் தவறென அதிகாரிக்குத் தோன்றினாலும் அம்மாதம் அவ்வியாபாரி கட்ட வேண்டிய வரியை (விசாரணை செய்த பிறகு) வரி அதிகாரி தாற்காலிகமாக நிர்ணயித்து, நமூனா B. 1 படி ஒரு உத்தரவு அனுப்புவார். அதன்படி வியாபாரி வரி கட்டிவிட வேண்டும். A. 3 ரிடர்ன் அனுப்புபவர்களுக்கும் இனி வருடம் முடிந்த பிறகு முடிவான வரி விதிப்பு (Final assessment) ஏற்படும். இதன்படி அவர்கள் பாக்கி கொடுக்க வேண்டியிருந்தால் அதைக் கொடுத்து விட வேண்டும். அல்லது தாற்காலிகமாகக் கொடுத்ததில் அதிகம் கொடுத்திருந்தால் அது இப்பொழுது திருப்பிக் கொடுக்கப்படும்.

(4) இனி, தோல் பதனிடுபவர்களும் மற்றத் தோல் வியாபாரிகளும் ஒவ்வொரு மாதமும் 25 தேதிக்குள் ரிடர்ன் அனுப்ப வேண்டியது. அதாவது மாதக் கடைசித் தேதிக்குள் அனுப்பவேண்டும் என்று இருந்தது, 25 தேதிக்குள் என்று திருத்தப்பட்டிருக்கிறது.

(5) மேற்கண்ட திருத்தங்களுக்கு உகந்தவாறு நமூனக்களின் வாசகங்களும் திருத்தப் பட்டிருக்கின்றன.

[2-3-1951—சென்னை சர்க்கார் கெஜட்—பாகம் I-ரூல் சப்ளிமெண்ட்-பக்கம் 137.]

விற்பனை வரிச் சட்டப்படி "லைசென்சு" வாங்கியவர் வியாபாரத்தை வேறு ஒருவருக்கு மாற்றினால்.

விற்பனை வரிச் சட்டப்படி "லைசென்சு" வாங்கி வியாபாரம் நடத்துபவர்கள் தங்கள் வியாபாரத்தை வேறு ஒருவருக்கு மாற்றினால், புதிதாக வியாபாரத்தை ஏற்றுக் கொள்ளும் வியாபாரி தம் பெயருக்கு ஒரு புது லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும். ஆனால் விற்றவர் பெயருக்கு உள்ள லைசென்சின் கெடு முடியும் வரை மறுபடியும் லைசென்சு கட்டணம் கட்ட வேண்டியதில்லை என்று இருந்த விதி 6 (7) ரத்து செய்யப்பட்டது. அதாவது இனி ஒரு லைசென்சு பெற்றவருடைய வியாபாரத்தை வாங்குபவர் அதே கெடுவுக்குத் தம் பெயருக்கு முழுக் கட்டணமும் கட்டி, புது லைசென்சு வாங்கிக்கொள்ள வேண்டும்.

[3-4-1951—சென்னை—சர்க்கார் கெஜட்—பாகம் I—ரூல் சப்ளிமெண்ட் 149.]

1-4-1951 முதல் வெளி ராஜ்யங்களுடன் நடக்கும் வர்த்தகத்தில், விற்பனை வரிச் செல்லாது.

இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் (The Constitution of India) 286(2)-வது ஷரத்துப்படி இந்திய யூனியனைச் சேர்ந்த 28 ராஜ்யங்களுக்குள் ஒன்றுக்கொன்று நடத்தும் வர்த்தகத்தில் ஏற்படும் விற்பனைக்கு (Sale or

purchase in the course of inter - state trade or commerce) விற்பனை வரி விதிக்க எந்த ராஜ்யத்திற்கும் அதிகாரமில்லை. அப்படி எந்த ராஜ்யத்தின் சட்டமாவது இவ்வித விற்பனை வரி விதிக்க வேண்டுமானல் இந்திய யூனியன் பார்லிமெண்டின் அங்கீகாரம் வேண்டும். ஆனல் இவ்வித விற்பனைகளுக்கும் விற்பனை வரி விதித்திருக்கும் ராஜ்ய சட்டங்கள் 31-3-1951 முடிய செல்லும் என்றும் உத்தர விட ஜனதிபதி அவர்களுக்கு இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தால் ஒரு விசேஷ அதிகாரம் கொடுக்கப்பட்டது.

இந்த அதிகாரத்தை அனுசரித்து ஜனதிபதி அவர்களும் 2-2-1950ல் செய்த பிரகடனப்படி மேற்கண்ட விற்பனைகளுக்கும் வரி விதிக்கும் ராஜ்ய சட்டங்கள் 31-3-1951 வரை செல்லு மென நீடிக்கப்பட்டன.

ஆகையால் சென்னை விற்பனை வரிச் சட்டப் படி சென்னை ராஜ்யத்திற்கும் இந்திய யூனியனைச் சேர்ந்த மற்ற ராஜ்யங்களும் நடக் கும் வர்த்தகத்தில் ஏற்படும் விற்பனைகளுக்கு (Sale or purchase) வரி விதிக்கும் ஷரத் துக்கள் 1-4-1951ல் உயிரிழந்தன. இவ்வித விற்பனைகளுக்கு மற்ற ராஜ்யங்களும் விற்பனை வரி விதிக்க முடியாது.

[குறிப்பு:—ஒரு ராஜ்யத்திலுள்ள வியா பாரிக்கும் வேறுராஜ்யத்திலுள்ள வியாபாரிக்கும் நடக்கும் வர்த்தகத்தில் (Inter state trade or commerce) ஏற்படும் விற்பனையைப் பற்றித் தான் மேற்கண்ட சட்டம் என்று சொல்லலாம். ஒரு ராஜ்யத்திலுள்ள வியாபாரி வேறு ராஜ்யத்தி லுள்ள வியாபாரி அல்லாத தனி நபருக்கு (Consumer) செய்யும் விற்பனைகள் இதில் அடங்கவில்லை என்று சொல்ல இடம் உண்டு. அவ்வித விற்பனைகளுக்கும் அரசியல் அமைப்புச் சட்டத்தின் 286 (1) படி ராஜ்யங்கள் விற்பனை வரி விதிக்க முடியாது. ஆனல் ஏற்கனவே இவ்வித விற்பனைகளுக்கு விற்பனை வரி விதித் திருக்கும் சட்டங்கள் அரசியல் அமைப்புச் சட்டத்தில் வேறு விதமாக சொல்லப்படா விட் டால் அவை செல்லுபடியாகும் என்று 372(1) ஷரத்தில் குறிப்பிடப்பட்டிருப்பதால், இவை செல்லும் என்று வாதாட இடமிருக்கிறது.]

நாட்டுச் செக்கு—விற்பனை வரி விதிவிலக்கு நீடிக்கப்பட்டுள்ளது:—

ஒரே ஒரு நாட்டுச் செக்கு மட்டில் வைத்துக் கொண்டு அச் செக்கில் உற்பத்தி செய்யப்படும் சாமான்களை மட்டில் வியாபாரம் செய்பவர் களுக்கு 1-4-1952 வரை விற்பனை வரி கிடை யாது என்று இவர்களுக்கு விதிவிலக்கு நீடிக் கப்பட்டிருக்கிறது.

[3-4-1951-சென்னை சர்க்கார் கெஜட்— பாகம் I - பக்கம் 533.]

விற்பனை வரிச் சலுகை:—

புஷ்பம், மீன், இறைச்சி (பாடம் செய்து டின்னில் அடைக்கப்படாதவை) இவைகளில் வியாபாரம் செய்பவர்களின் ஒரு வருட மொத்த வியாபாரம் ரூ. 10,000க்குக் குறையாமலும் ரூ. 15,000க்கு மேற்படாமலிருந்தால் அவர்கள் கொடுக்கவேண்டிய விற்பனை வரி ரூ. 96 தான் என்றும் அவர்களுடைய மொத்த வியாபாரம் ரூ. 15,000க்கு மேற்பட்டும் ரூ. 20,000க்கு மேற்படாமலும் இருந்தால் அவர்கள் கொடுக்க வேண்டிய விற்பனை வரி ரூ. 144 தான் என்றும் குறைக்கப்பட்டிருக்கிறது. இது 1-4-1951 முதல் அமுல். (17-4--1951 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 617.)

விற்பனை வரிச் சட்டத் திருத்தம் அப்பீல் டிரிபுனல்;—

விற்பனை வரி அப்பீல்களை விசாரிக்க ஒரு பிரத்தியேக டிரிபுனல் ஏற்படுத்தியும் இன்னும் இச்சட்டத்தில் சில முக்கிய மாறுதல்களைச் செய்துமுள்ள 1951-ம் வருடத்திய 6-வது சட் டத்தின் ஷரத்துக்கள் அடுத்த இதழில் விவர மாய் விளக்கப்படும்.

புதிய வருமான வரி விகிதங்கள்:—

இவைகளும் அடுத்த இதழில் விவரிக்கப் படும்.

இப்பகுதியில் நமது வாசகர்கள் கேட்கும் சட்ட சம்பந்தமான கேள்விகளுக்கு மட்டில் பத்திரிகையில் இடமிருக்கும் வரை பதில் அளிக்கப்படும். கேள்வி கேட்பவர்கள் தங்கள் சொந்த விவகாரங்களைப்பற்றி எழுதக்கூடாது. சட்டங்களிலோ, விதிகளிலோ ஏற்படக்கூடிய சந்தேகங்களைத் தெளிவுபடுத்திக்கொள்ளும் முறையில்தான் கேள்விகள் இருக்கவேண்டும். கேள்விகள் சுருக்கமாய் இருக்கவேண்டும். கேள்விகளுக்குச் சொல்லப்படும் பதில் **அபிப்பிராயமே.**

கேள்விகளுக்கு நேரில் பதில் கிடைக்க: "வக்கீல்" பத்திரிகையில் மேற்கண்டபடி வரிசைக்கிரமமாய்ப் பதில் வெளிவரும் முன்பே பிரத்தியேகமாகத் தபால் மூலம் நேராகப் பதில் கேட்கும் நேயர்கள் கேள்வி அடங்கிய தாளை **ரிஜிஸ்டர் தபால் மூலம்** காரியாலயத்திற்கு அனுப்புவதுடன் அத்துடன் தமது விலாசம் எழுதப்பட்ட கவர் ஒன்றும், **ரூபாய் மூன்று** தபால் ஸ்டாம்பும் சேர்த்து அனுப்பவேண்டும். ஒவ்வொரு கேள்விக்கும் தனித்தனி ஸ்டாம்பு அனுப்பவேண்டும். பிரத்தியேக பதில் அனுப்பப்படும்.

50. **கேள்வி:** (டேனியல் — சிவல்பட்டி) கிறிஸ்தவ முறைப்படி கலியாணம் செய்துகொண்டவர்கள் புருடனும் மனைவியும் ஒத்து வாழ இஷ்டப்படாமல் ஒரு பத்திரத்தின் மூலம் விவாக ரத்து தாங்களே எழுதிக்கொண்டால் அந்த விவாக ரத்து செல்லுமா? கிறிஸ்தவச் சட்டப்படி விவாக ரத்து செய்துகொள்வது எப்படி?

பதில்: இந்துக்களுக்குத்தான் "விவாக ரத்து"ச் சட்டம் புதிது. கிறிஸ்தவர்களுக்கு "விவாக ரத்து"ச் சட்டம் 1869 ஆம் வருடம் முதல் இருக்கின்றது. (The Divorce Act IV of 1869) அச்சட்டப்படித்தான் கிறிஸ்தவர்கள் "விவாக ரத்து" செய்துகொள்ள வேண்டும். பத்திரத்தின் மூலம் செய்துகொள்ள முடியாது.

51. **கேள்வி:** (ஷை) ஒரு கிறிஸ்தவ குடும்பத்தில் பூர்வீகச் சொத்து இருக்கிறது. புருஷன் இறந்து போனான். மனைவியும் இரண்டு பெண் மக்களும் உண்டு. இறந்தவருடைய சொத்துக்களை மனைவி மட்டில் (பெண்களுக்குச் சம்பந்தமில்லாமல்) தானே விற்றுவிட்டால் சட்டப்படி செல்லுமா? பெண்மக்களுக்குப் பாகம் இல்லையா?

பதில்: இறந்தவருடைய சொத்துக்களில் 3ல் 1 பாகத்தை மனைவி அடைவார். பாக்கியை இரண்டு பெண்மக்களும் சமபாகமாக அடைவார்கள். மனைவி மட்டில் தன் பாகத்திற்கு மேற்பட்ட சொத்தை விற்பது செல்லாது.

52. **கேள்வி:** (ஷை) கிறிஸ்தவச் சட்டப்படி கலியாணம் செய்தவர், மனைவியை விட்டுவிட்டு, 7 வருடமான பின் இந்து மதத்தில் சேர்ந்து கொண்டு இந்து சடங்கு பிரகாரம் கலியாணம் செய்து கொண்டால், குற்றமாகுமா? விவாக ரத்து செய்து கொண்டு கலியாணம் செய்யலாமா?

பதில்: இப்பொழுது குற்றமாகும். விவாக ரத்து செய்துகொண்டுவிட்டால் எந்த மதத்தில் வேண்டுமானாலும் இருந்து கொண்டே, இரண்டாவது கலியாணம் செய்து கொள்ளலாம். சமீபத்தில், சென்னை ஹைகோர்ட் உயர் நீதிபதி பஞ்சாபகேசய்யர் அவர்களால் ஒரு தீர்ப்பளிக்கப்

பட்டது. இந்துவாக இருந்த ஒருவர் கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து ஒரு மணம் செய்து கொண்டார். பிறகு, மறுபடியும் அவர் தம்மை இந்துவாக மாற்றிக்கொண்டு ஒரு இந்துவை இரண்டாவது மணம் செய்து கொண்டார். இது சென்னை இந்து பலதாரத்தடைச்சட்டம் அமுலுக்குவருவதற்கு முன்பு. கிறிஸ்தவர்களுக்கான சட்டப்படி அவர் இரண்டாவது மணம் செய்து கொண்டது குற்றம் என்று அவர்மீது வழக்குத் தொடரப்பட்டது. உயர் நீதிபதி அவர்கள், இவர் செய்தது குற்றமல்ல என்று அபிப்பிராயப்பட்டனர். இந்துவாக இருந்தவர் வேறு மதத்திற்கு போனாலும், மறுபடியும் திரும்ப இந்து மதத்திற்கு வர அவருக்கு உரிமையுண்டென்றும் இந்து பலதாரத்தடைச் சட்டம் வருவதற்கு முன்பே இந்த இந்து இரண்டாவது மணம் செய்து கொண்டு விட்டபடியால் யாதொரு குற்றமும் செய்யவில்லை என்றும் நீதிபதி அவர்கள் அபிப்பிராயப் பட்டனர். (64-லா வீக்லி— சிறு குறிப்புகள் பக்கம் 28—பார்க்கவும்)

53. **கேள்வி:** (சாமிநாதன்) சென்னை இந்து பலதாரத்தடை விவாக ரத்துச் சட்டப்படி கணவன் தம் மனைவி மீது சப்கோர்ட்டில் விவாக ரத்து மனுப்போட்டு, நடவடிக்கை கோர்ட்டில் நடந்து கொண்டிருக்கும்போது, அவ் விஷயத்தை நாட்டுப் பஞ்சாயத்தார் பஞ்சாயத்துச் செய்து, மனைவிக்கு ஜீவனத்திற்காக ஓர் தொகை செட்டில்மெண்ட் செய்து அவளிடம் விவாகரத்துப் பத்திரம் எழுதி வாங்கி அதை, சப் ரிஜிஸ்ட்ரார் ஆபீசில் பதிவு செய்து கொண்டால், விவாக ரத்து செல்லுமா? புருடன் மறு விவாகம் செய்து கொள்ளலாமா?

பதில்: செல்லாது. தொன்று தொட்ட ஜாதி வழக்கப்படி விவாக ரத்து செய்து கொள்ளும் உரிமை இருந்தாலொழிய, விவாக ரத்து செய்ய கோர்ட்டுகளுக்குத்தான் உரிமை உண்டு. பத்திரங்களின் மூலமோ, சம்மதத்தின் மூலமோ, பஞ்சாயத்து மூலமோ 'விவாகரத்து' செய்து கொள்ள முடியாது. தொன்று தொட்ட ஜாதி வழக்கப்படிக்கோ, கோர்ட் மூலமாகவோ விவாக ரத்து செய்து கொள்ளாமல் மறுமணம் செய்து கொள்வதும் செல்லாது; குற்றமாகும்.

54. **கேள்வி:** (விஜயா லுங்கி கம்பெனி — குடியாத்தம்) ஒரு சாயத் தொழிற்சாலைக்கு ஷாப் சட்டப்படி விடுமுறை நாள் உண்டா?

பதில்: "தொழிற்சாலை"யாக இருந்தால் அதற்கு ஷாப் சட்டமே கிடையாது. "தொழிற்சாலை" என்றால் உற்பத்தி வேலையில் ஈடுபட்டு, பத்துத் தொழிலாளர்களுக்குக் குறையாமல் வேலை செய்யும் ஸ்தாபனத்தைக் குறிக்கும். அப்படிக்கில்லாவிட்டால் ஷாப் சட்டம் உண்டு. ஷாப் சட்டப்படி சாயம் போடும் வேலையில் ஈடுபட்டிருக்கும் ஸ்தாபனங்களுக்கு இரண்டு ஷாப் சட்ட விதிகள் மட்டில் கிடையாது. அதாவது (1) தினசரி திறந்து மூடும் மணி நேர விதி. (2) வார விடுமுறை விடவேண்டுமென்ற விதி, இவை இரண்டு கிடையாது.

55. **கேள்வி:** (ஷை) ஒரு ஸ்தாபனத்தில் 16 வயதுக்கு மேற்பட்ட பையனைச் சம்பளம் இல்லாமல் வைத்திருப்பது ஷாப் சட்டப்படி குற்றமா?

பதில்: ஷாப் சட்டப்படி குற்றமாகாது; வேறு சட்டங்களின்படி குற்றமாகலாம்.

56. **கேள்வி:** (பரமசிவம்) சென்னை ராஜ்யத்தில் வசிக்கும் ஒருவருக்குப் பம்பாயில் இருக்கும் ஒரு வியாபாரி பாக்கி கொடுக்கவேண்டியிருந்தால், எந்தக் கோர்ட்டில் நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்? இங்குள்ள கோர்ட்டுகளில் நடவடிக்கை எடுக்க முடியாவிட்டால், ஏன் எடுக்க முடியாது?

பதில்: சிவில் வழக்கு முறைச் சட்டத்தின் (Civil Procedure code) செக்ஷன் 20 படி, இவ்விதமான தாவாக்களைப் பிரதிவாதி வசித்து வரும் இடத்திற்கான கோர்ட்டிலாவது, வியாஜ்ய மூலம் அல்லது வியாஜ்ய மூலத்தின் ஒரு பாகம் எங்கே ஏற்பட்டதோ அந்த இடத்திற்கான கோர்ட்டிலாவது தாவா போட வேண்டும். பம்பாயில் இருக்கும் வியாபாரி எந்த ஒப்பந்தத்தின்படி பாக்கி கொடுக்க வேண்டுமோ, அந்த ஒப்பந்தம் (அல்லது அதன் ஒரு பாகமாவது) சென்னை ராஜ்யத்தில் ஏற்பட்டிருந்தால், இங்கேயே அவர்மீது தாவா செய்யலாம். உதாரணமாக, கடிதப் போக்குவரத்துக்களால் ஏற்படும் ஒப்பந்தங்கள். அல்லது அந்த வியாபாரி தம் சரக்குகளைச் சென்னை ராஜ்யத்திற்கு அனுப்புவதாக ஒப்புக்கொண்டிருந்தால், சாமான் அனுப்பப்பட வேண்டிய இடத்தில் வியாஜ்ய மூலம் ஏற்படும்.

கண்ட்ரோல்-லைசென்ஸ்-ரேஷன்-விலை நிர்ணயம்
இதர சர்க்கார் அறிக்கைகள்

சென்னை நிலக்கரிக் கட்டுப்பாடு உத்தரவு (1951.)

(Madras Coal (Permit Fee) Control Order, 1951.) நிலக்கரி சம்பந்தமாய், சென்னைச் சர்க்கார் இப்புதுக் கண்ட்ரோல் உத்தரவு பிறப்பித்திருக் கின்றனர். இது 1-4-1951 முதல் அமுலுக்கு வந்து விட்டது. இது மத்திய சர்க்காரால் நிர்ணயம் செய்யப்படும் 'கோட்டா'ப்படி சென்னை ராஜ்யத்துக்கு வரும் நிலக்கரி, கோக் முதலியவை பற்றியது. (சாதாரண கரிக்கு Charcoal இக்கட்டுப்பாடு உத்தரவு கிடையாது.) இனி நிலக்கரி வாங்கப் பர்மிட் வேண்டும். மாகாண நிலக்கரி கண்ட்ரோலரால் பர்மிட்கள் கொடுக்கப்படும். பர்மிட்டில் கண்ட நிபந்தனைகளை மீறுவது குற்றம்.

(3-4-1951 - சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் II-ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் 51.)

விடுதலை அடைந்தவர்களுக்குச் சொந்த இடம் போய்ச்சேர பிரயாணச் செலவும், படியும் கொடுக்கப்படும்.

கிரிமினல் நடவடிக்கை விதிகளின் (Criminal Rules of Practice and Orders) 398, 398 A விதிகளுக்குப் பதிலாக புதிதாக ஹைகோர்ட்டால் கீழ்க்கண்டபடி விதி 398 என்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதாவது; கிரிமினல் கோர்ட்டுகளில் விடுதலை அடைபவர்களுக்கும், வழக்குமேல் நடத்தப்படாமல் 'டிஸ்சார்ஜ்' செய்யப் படுபவர்களுக்கும், கிரிமினல் புரொஸீஜர் கோடு 427 ஆவது செக்ஷன்படி அரஸ்ட் செய்யப்பட்டு பின்பு விடுவிக்கப் படுபவர்களுக்கும் அவர்கள் ஏற்கனவே ரிமாண்டில் வைக்கப்பட்டிருந்து அவர்களுடைய வாசஸ்தலம் 10 மைலுக்கு அப்பால் இருந்து அவர்களிடம் அங்கே போய்ச் சேரக் கையில் பணமில்லாவிட்டால்—அவர்களுக்குப் பிரயாணச் செலவும் படியும், மூன்றும் வகுப்புச் சாட்சிகளுக்குள்ளது போல், கொடுக்கப்பட வேண்டுமென்று உத்தரவிட, கோர்ட்டுக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

(10-4-1951 சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II-ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் - 68)

கிரிமினல் கோர்ட் நடவடிக்கைகளின் நகல்கள் பப்ளிக் பிராசிகூடர்களுக்குக் கொடுக்கப்பட வேண்டும்.

கிரிமினல் வழக்கு முறை விதிகளில் (Criminal Rules of Practice and Orders) விதி 329 (6) கீழ்க்கண்டபடி ஹைகோர்ட்டால் திருத்தி அமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது எந்தக் கிரிமினல் நடவடிக்கைகளிலும் சம்பந்தப்பட்ட தஸ்தவேஜுகளுக்கு நகல் வேண்டுமென்று ஜில்லா பப்ளிக் பிராசிகூட்டர் கோர்ட்டுக்கு மனுச்செய்து கொண்டால், அவருக்கு ஸ்டாம்பிலோ, ஜட்ஜ் அல்லது மாஜிஸ்ட்ரேட் இஷ்டப்படி வெறும் தாளிலோ, நகல் தயார் செய்து கொடுக்கப்பட வேண்டும்.

(3-4-1951 - சென்னைச் சர்க்கார் கெஜட் - பாகம் II-ரூல் சப்ளிமெண்ட் - பக்கம் 65.)

ஷாப் சட்டம்

சில கடைகள் வாரம் ஒரு நாள் மூட வேண்டியதில்லை.

பழங்கள், வெற்றிலை, வாழை இலை, கோழி முட்டை இவைகளில் பட்டில் வியாபாரம் செய்யும் கடைகள் இனி வாரத்தில் ஒரு தினம் கடை மூட வேண்டியதில்லை.

(17-4-1951 சென்னை சர்க்கார் கெஜட்-பாகம் I-பக்கம் 594.)

இதுவும் உதவும்

[இப்பகுதியில் வெளியாகும் விவரங்களைப் படிக்கவேண்டுமென்று இன்று உங்களுக்குத் தோன்ரு விட்டாலும் என்றைக்காவது இது உங்களுக்கு உபயோகப்படலாம்.]

பாகபத்திரங்களுக்கு ஸ்டாம்பும் ரிஜிஸ்டர் கட்டணமும்

பாகபத்திரங்களுக்கு, சென்னை திருத்த ஸ்டாம்பு சட்டத்தின் ஆர்டிகிள் 38-ன் படி ஸ்டாம்பு வேண்டும். பாகம் செய்யப்படும் சொத்துக்களின் மதிப்பு எவ்வளவு ரூபாயாக இருந்தால் அதற்கு எவ்வளவு ரூபாய் ஸ்டாம்பு வேண்டுமென்று கீழே அட்டவணை கொடுக்கப் பட்டிருக்கிறது. இதில் ஒன்றும் கஷ்டமில்லை. ஆனல் பாகச்சொத்துக்களின் 'மதிப்பு' எவ்வளவு என்று கணக்குச் செய்வதிலும், எவ்வளவு 'மதிப்பு'க்கு ஸ்டாம்பு வாங்கவேண்டுமென் பதைப் பற்றியும் சில விசேஷ விதிகள் இருக் கின்றன. அவ்விதிகளைக் கவனிப்போம். அவை கள் பின்வருமாறு:—

1. எல்லாச் சொத்துக்களின் மதிப் புக்கும் ஸ்டாம்பு வேண்டாம்

'பிரிந்து போகும்' சொத்துக்களின் மதிப்புக்கு மட்டில் தான் (Value of the Separated share or shares) ஸ்டாம்பு வேண்டும். 'பிரிந்து போகும்' சொத்துக்கள் என்ருல் என்ன என்று ஸ்டாம்பு சட்டத்திலேயே விளக்கப் பட்டிருக்கிறது. சொத்துக்கள் எவ்வளவு பாகங் களாகப் போடப்பட்டாலும், அவைகளுள் பெரிதாக உள்ள, அதாவது அதிகமான மதிப்புள்ள ஒரு பாகத்தை நீக்கி மற்றப்பாகங்கள் எல்லாம் 'பிரிந்து போகும்' அல்லது 'பிரிக்கப் படும்' பாகங்களாகும். எல்லாப்பாகங்களும் சம மதிப்புள்ள பாகங்களாக இருந்தால், ஒரு பாகம் போக, பாக்கிப் பாகங்கள் 'பிரிந்து போகும்' பாகங்களாகும். சில உதாரணங்களைக் கவனித் தால் இது விளங்கும்.

உதாரணம் 1:—நான்கு சகோதரர்கள் ரூ. 4000 மதிப்புள்ள பொதுச் சொத்துக்களைப் பாகம் செய்து கொள்ளுகின்றனர். சொத்துக்கள் 4 சம பாகங்களாகப் பிரிக்கப்படுகின்றன. ஒவ்வொரு பாகத்தின் மதிப்பும் ரூ. 1000. எல்லாச் சொத்துக்களின் மொத்த மதிப்பு ரூ. 4000 ஆக இருந்தாலும் ஒரு பாகம் போக, பாக்கி 3 பாகங்களின் மதிப்பு ரூ. 3000. இதற்குத்தான் ஸ்டாம்பு வாங்கவேண்டும். இந்த 3 பாகங்கள் தான் 'பிரிக்கப்படும்' பாகங்கள். ரூ. 3000-க்குக் கீழே கண்ட ஸ்டாம்பு அட்ட வணைப்படி ரூ. 45-க்கு ஸ்டாம்பு வேண்டும்.

உதாரணம் 2:—இரண்டு சகோதரர்களும் அவர்களுடைய சிற்றப்பனும் ரூ. 4000 மதிப் புள்ள பொதுச் சொத்துக்களைப் பாகம் செய்து கொள்ளுகின்றனர். சிற்றப்பனுக்குச் சரிபாதி பாகமும் ஒவ்வொரு சகோதரருக்கும் கால் கால் பாகமும் வைக்கப்படுகிறது. இதில் அதிக மதிப் புள்ள (அதாவது ரூ. 2000 மதிப்புள்ள) சிற்றப் பனின் பாதி பாகம் போகப் பாக்கி உள்ள இரண்டு பாகங்களுக்கும் சேர்ந்து மொத்த மதிப்பு ரூ. 2000-க்குத் தான் ஸ்டாம்பு வேண்டும். இவைதான் 'பிரிக்கப்படும் பாகங்கள்' ரூ. 2000-க்கு, கீழே கண்ட அட்டவணைப்படி ரூ. 30-க்கு ஸ்டாம்பு வேண்டும்.

2. 'மதிப்பு' என்ருல் என்ன?

சர்க்காருக்குக் கிஸ்தி கொடுக்கும் நிலங்களாக இருந்தால், (அதாவது 30 வருடங்களுக்கு மேற்படாத காலத்திற்கு, செட்டில்மெண்ட் செய்யப்பட்டு ஜாடா கிஸ்தியும் விதிக்கப்பட்ட நிலங்களாக இருந்தால்) அவ்வித நிலங்களுக்கு ஒரு வருட கிஸ்தி எவ்வவோ அதைப்போல் 25 மடங்குத் தொகையை அச்சொத்தின் மதிப்பாக வைத்துக்கொள்ளவேண்டும். (இதற்கு முன் 5 மடங்காக இருந்தது சமீபத்தில் உயர்த் தப்பட்டுள்ளது) கிஸ்தி செலுத்தாத நிலங் களுக்கும் வீடு ஜங்கம சொத்துக்கள் நிலுவைகள் போன்ற சொத்துக்களுக்கும் 'காலக்கிரயம்' (Market Value) எதுவோ, அதுதான் அதன் மதிப்பு. இவ்விதம் ஒவ்வொரு பாகத்தில் அடங்கிய சொத்துக்களுக்கும் மதிப்புப் போட்டு அந்த மதிப்புக்கு மேலே கண்ட விதிப்படி ஸ்டாம்பு வேண்டும்.

3. ஸ்டாம்பு விகிதம்:—

இவ்விதம் ஒவ்வொரு பாகத்தின் மதிப்பு என்ன, எந்த எந்தப் பாகங்களின் மதிப்புக்கு ஸ்டாம்பு வேண்டுமென்று முன் சொன்னபடி கணக்குச் செய்துகொண்டு அந்த மதிப்பு

தமிழ்நாடு ... காப்பக நிலையம்
187707

எவ்வளவோ, அதற்குக் கீழ்க்கண்ட அட்டவணைப் படிக்குள்ள ஸ்டாம்பு வேண்டும்.

ஸ்டாம்பு விகித அட்டவணை

'பிரிக்கப்படும்' சொத்தின் மதிப்பின் பேரில் அடியில் கண்டபடி ஸ்டாம்பு வேண்டும்.

"சொத்து மதிப்பு"				ஸ்டாம்பு ரூ. அ.பை
ரூ. 10-க்கு மேற்படாமலிருந்தால்				0—6—0
ரூ. 10-க்கு மேல் ரூ. 50-க்கு மேற்படாமலிருந்தால்				0—12—0
ரூ. 50	,,	ரூ. 100	,,	1—8—0
ரூ. 100	,,	ரூ. 200	,,	3—0—0
ரூ. 200	,,	ரூ. 300	,,	4—8—0
ரூ. 300	,,	ரூ. 400	,,	6—0—0
ரூ. 400	,,	ரூ. 500	,,	7—8—0
ரூ. 500	,,	ரூ. 600	,,	9—0—0
ரூ. 600	,,	ரூ. 700	,,	10—8—0
ரூ. 700	,,	ரூ. 800	,,	12—0—0
ரூ. 800	,,	ரூ. 900	,,	13—8—0
ரூ. 900	,,	ரூ. 1000	,,	15—0—0

ரூ. 1000-க்கும் மேற்பட்ட ஒவ்வொரு ரூ. 500-க்கும் அதன் பாகத்திற்கும் அதிகப்படியாக ரூ. 7—8—0

4. ரிஜிஸ்டர் கட்டணம்:

ஸ்தாவர சொத்துக்கள் சம்பந்தமான பாக பத்திரங்கள் கட்டாயமாக ரிஜிஸ்டர் செய்யப்பட வேண்டும். பாகபத்திர ஸ்டாம்புக்காக என்ன மதிப்போ, அதே மதிப்புத் தொகைக்கு அடியில்கண்டபடி ரிஜிஸ்டர் கட்டணம் கட்ட வேண்டும்:—

தொகை.				ரிஜிஸ்டர் கட்டணம் ரூ. அ.பை.
ரூ. 1-முதல்		ரூ. 10-உள்பட		0—6—0
ரூ. 10-க்கு மேல்		ரூ. 25	,,	0—9—0
ரூ. 25	,,	ரூ. 50	,,	0-12—0
ரூ. 50	,,	ரூ. 75	,,	1—2—0
ரூ. 75	,,	ரூ. 100	,,	1—8—0
ரூ. 100	,,	ரூ. 200	,,	2—4—0
ரூ. 200	,,	ரூ. 300	,,	3—0—0
ரூ. 300	,,	ரூ. 400	,,	3-12—0
ரூ. 400	,,	ரூ. 500	,,	4—8—0
ரூ. 500	,,	ரூ. 600	,,	5—4—0
ரூ. 600	,,	ரூ. 750	,,	6—0—0
ரூ. 750	,,	ரூ. 1000	,,	7—8—0
ரூ. 1000	,,	ரூ. 1500	,,	9—0—0
ரூ. 1500	,,	ரூ. 2000	,,	10—8—0
ரூ. 2000	,,	ரூ. 2500	,,	12—0—0
ரூ. 2500	,,	ரூ. 3000	,,	14—0—0
ரூ. 3000	,,	ரூ. 3500	,,	16—0—0
ரூ. 3500	,,	ரூ. 4000	,,	18—0—0
ரூ. 4000	,,	ரூ. 5000	,,	20—0—0

ரூ. 5000-க்கு மேல் இருந்தால் ரூ. 5000-க்குள்ள ரூ. 20—0—0-ம், மேற்கொண்டிருக்கும் ஒவ்வொரு ரூ. 1000-க்கும் ரூ. 4—0—0 வீதமும் ரிஜிஸ்டர் கட்டணம் கட்டவேண்டும்.

5. யார் ஸ்டாம்புச் செலவை ஒத்துக்கொள்ளவேண்டியது:

பாகம் செய்து கொள்பவர்கள் இது சம்பந்தமாக ஏதாவது ஒப்பந்தம் செய்து கொண்டிருந்தால் அதன்படி அவரவர்கள் ஸ்டாம்புச் செலவை ஒத்துக்கொள்ள வேண்டும். ஒப்பந்தம் ஒன்றுமில்லா விட்டால் ஸ்டாம்புச் சட்டத்தின் 29-ஆவது செக்ஷன்படி அவரவர் அடையும் பாகத்தின் மதிப்பின்படி மொத்த ஸ்டாம்புச் செலவையும் வீதாசாரமாகப் பொறுத்துக் கொள்ள வேண்டியது.

"சக்தி ஆரூடம்"!

ஸ்ரீ K. R. அப்ளாச்சாரியார் M.A.L.T. வைஸ் பிரின்சிபால், டீச்சர்ஸ் காலேஜ், சைதாப்பேட்டை, 27-6-50ல் எழுதுகிறார்.

"தங்கள் பலன்கள் முற்றிலும் பலித்தன என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்."

1 to 3 ஆரூட கேள்விகளுக்கு ரூ. 1.
3-க்கு மேல் கேள்வி 1க்கு அணா 8.
1 வருட பலன் ரூ. 5.
ஜாதகம் கணிக்க ரூ. 2.
சக்தி கவசம் ரூ. 7—8—0.
வி. பி. பி. தனி,
ஜாதகம் OR எழுதும் நேரம் தேவை.
N. B:—வெளி நாட்டிற்கு இரட்டிப்பு சார்ஜ் முன் பணமாய் தேவை.

சக்தி ஹோம், விருத்தாசலம் P.O. (S. I.)

PRINTED BY N. RAMARATNAM, M.A, B.L., AT THE MADRAS LAW JOURNAL BRANCH PRESS, TIRUBUVANAM, TIRUVIDAIMARUDUR, AND PUBLISHED BY R. NARASIMHAN, B.A., B.L., AT NO. 73, DABIR WEST STREET, KUMBAKONAM, FOR SOUTHERN BOOK HOUSE LTD. Editor:—V. S. VIJAYARAGHAVACHARI, B.A., B.L.,

ஆடைகளை அழகு பெறச் செய்வது !

அன்னகிளி

சோப்

தயாரிப்பவர் :—

சவுத் இந்தியன் சோப் ஒர்க்ஸ்

P. B. No. 38

தஞ்சாவூர்.

ஜெயலெட்சுமி என்ஜினீரிங் கம்பெனி,

மணிக்கூண்டு, மாயூரம்.

ஸ்டாக்கிஸ்டு:

பிரிட்டிஷ் மேக் ரேடியோக்கள் அமெரிக்கன்,

ஆட்டோமாடிக் வாடர் லிஸ்டம்

எலக்டிரிக் மோட்டார்கள்

எல்லாவித ரேடியோக்களும் சாஸ்திரீய முறையில் பழுது பார்த்து கொடுப்பவர்கள்

ரெமிங்க்டன் போர்ட்டபிள் டைப்ரைட்டர் டீலர்கள்:

ஸ்தாபிதம் 1942 — தந்தி "லலிதாலய"

உயர்தர ஆயுர்வேத சிகித்ஸைக்கும் மருந்துக்கும்

லலிதா பார்மஸி

ஆயுர்வேத வைத்தியசாலை

கும்பகோணம்.

ஹெட் ஆபீஸ்
49, மூர்த்தி செட்டித் தெரு.

பிராஞ்சு
73, பக்தபுரி அக்ரஹாரம்.

விசேஷ தயாரிப்பு

நரம்பு தளர்ச்சிக்கு "யௌவநீ"

கல்யாண பட்டு நூல் ஜவுளிகளுக்கு

★

ராதா ஸில்க் எம்போரியம்

★

119, பெரியதெரு, :: கும்பகோணம்.

போன் நெ. 83

உ

கல்யாண காலத்துக்கேற்ற

ஜரிகை கலந்த

பட்டுச் சேலைகள் &

நூல் ஜவுளிகள்

உங்கள் மனதிற்கு உகந்த

தினுசுகள் கிடைக்குமிடம்

கொள்ளேகால் ஸில்க் ஹவுஸ்

பெரிய தெரு, :: கும்பகோணம்.

Regd. No. M. 5399

ஸ்தாபிதம் 1909. போன் நெ. 57 தந்தி விலாசம் "கோகுல்"

டி. எஸ். ஆர். & கோ.,

கும்பகோணம்.

பிராஞ்சு: (மன்னார்குடி)

கூந்தலுக்கு வளர்ச்சியையும் கண்ணுக்கு குளிர்ச்சியையும்
கொடுப்பதில் நிகரற்ற

சந்தனாதித்தைலம். அரைக்கீரைவிதைத்தைலம்.

கோகுல் கூந்தல் தைலம்

வாசனைப்பாக்கு, பல காய்கறி ஊறுகாய், ரோஜாப்பூ குல்கந்து, ஊதுவத்திகள்
பன்னீர் இதர வாசனை சாமான்களும் கிடைக்கும்.

SOLE AGENTS:

For Madras
SURAJ AGENCIES
MADRAS

For Coimbatore, Palghat & Nilgiris
B. BALAPATTABI CHETTIAR,
246, VYSYAL STREET, COIMBATORE.

PRINTED AT THE MADRAS LAW JOURNAL PRESS, TIRUBUVANAM, TDR.